Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 07 (12.12.2002) வியாழக்கிழமை இதழ் : 72

## குடாநாடு முழுவதும் இன்று ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு முழுவதும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படவுள்ளது. நெல்லியடியில் பொது மக்கள் மீது பொலிஸார் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்தே இன்றைய ஹர்த்தால் குடாநாடு தழுவிய வகையில் நடை பெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் நெல்லியடி யில் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது பொலி ஸார் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்தும் பொலி ஸாரின் அத்துமீறிய அடாவடித்த னங்கள் தொடர்ந்தும் நடைபெறா மல் தடுக்கக்கோரியும் இன்றைய பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட வுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு உத்தரவாதம் தரும்வரை

## நெல்லியடி வர்த்தகர்கள் தொடர்ந்து போராடுவர்!

(வடமராட்சி)

நெல்லியடியில் தொடர்ச்சியான கடையடைப்பு மற்றும் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீதான பொலிசாரின் தாக்குதலைக் கண்டித்து மேற்படி நடவடிக்கையைத் தொடர்வதற்கு நெல்லியடி வர்த்தகர் சங்கம் தீர்மா னித்துள்ளது. தமது பாதுகாப்புக்குப் படையினர் உத்தரவாதம் வழங் கும்வரை தமது போராட்டம் தொடரும் என்றும் அப்பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

# நெல்லியடி சம்பவம் பற்றி விசாரிக்க ரணில் சம்மதம்

## கூட்டமைப்பினரிடம் உறுதி தெரிவிப்பு

(கொழும்பு)

**நெல்லியடியில் பொதுமக்கள் மீது பொலிசார் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதல் குறித்து விசாரணை நடத்த குழு ஒன்றை அமைக்க பிரத மர் ரணில் விக்கிரமசிங்க சம்மதித்துள்ளார்.**

நெல்லியடி அசம்பாவிதம் குறித்து நேற்று மாலை பிரதமர் அலுவல கத்தில் சந்திப்பு ஒன்றுக்கு வருமாறு பிரதமர் கேட்டுக்கொண்டதற்கு அமைய, தமிழ்க்கூட்டமைப்பு எம். பிக்களான அ.விநாயகமூர்த்தி, ரவி ராஜ், சந்திரநேரு ஆகியோர் அங்கு சென்றனர்.

அங்கு - ஈ.பி.டி.பி. செயலாளர் நாய கம் டக்ளஸ் தேவானந்தா, கலாநிதி விக்னேஸ்வரன், மற்றும் ஈ.பி.ஆர். எல்.எவ் வரதர் அணியின் சுபத்தி ரன், சங்கர் ராஜி ஆகியோர் ஏற்கனவே வந்திருந்தனர். சந்திப்பு மாலை 5 மணியளவில் ஆரம்பமானது. இச்சந் திப்பின்போது, நெல்லியடியில் மக் கள்மீது பொலிஸார் தேவையற்ற வகையில் தாக்குதல் நடத்திய மைக்கு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்ததோடு, இது குறித்து

(10 ஆம் பக்கம் பார்க்க)



சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் கூட்டத்தில் யாழ். ஆயர் உரையாற்றுவதையும், யாழ். இராணுவத்தளபதி சரத் பொன்சேகா சக அதிகாரியொருவருடன் உரையை அவதானிப்பதையும் படத்தில் காணலாம். *(படம்:- லிவிங்ஸ்டன்)*

### நெல்லியடி சம்பவம் அறிக்கை சமர்ப்பிக்க பொலிஸ் மா அதிபர் உத்தரவு!

(கொழும்பு நிருபர்)

நெல்லியடியில் நேற்றுமுன்தி னம் நடைபெற்ற அசம்பாவிதம் குறித்து உடனடியாக முழுவிபர அறிக் கையைத் தமக்கு அனுப்பிவைக்கு மாறு பொலிஸ் மா அதிபர் ஆனந்த ராஜா, யாழ்.பிராந்தியப் பிரதிப் பொலிஸ மா அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சுவிஸ் சென்றிருந்த தமிழ்ச்செல்வன், கருணா வன்னி திரும்புகின்றனர்

(கிளிநொச்சி)

புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா குழுவினர் நாளை வன்னி வந்து சேரவுள்ளனர். இவர் கள் நேற்றுக்காலை சுவிற்சர்லாந்து சூரிச் நகரிலிருந்து புறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஞானம்ஸ் ஹோட்டலிலிருந்து படையினர் வெளியேறுவர்!

### சுற்றுப்பகுதி வீடுகளும் விடுவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஞானம்ஸ் ஹோட்டல் படைநிலை களை அகற்றி, ஞானம்ஸ் ஹோட்ட லையும் அப்பகுதியை சுற்றியிருக் கும் வீடுகளையும் மக்களின் பாவ னைக்கு விடுவதென, நேற்று நடை பெற்ற சமாதானத்திற்கும் நல்லெண் ணத்திற்குமான மக்கள் குழுக் கூட் டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் காலை 10.30 மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே - யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இம்முடிவைத் தெரி வித்தார்.

ஞானம்ஸ் விடுதியிலுள்ள படை நிலைகளை அகற்ற, இராணுவ தலைமைப்பீடத்திலிருந்து உத்தரவு கிடைத்திருப்பதாகத் தெரிவித்தது டன், சுபாஸ் விடுதியை விட இராணு வத்தினருக்கு ஞானம்ஸ் விடுதிதான்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



எல்லாம் சுத்திச் சுத்திச் சுப்பற்ற கொல்லைக்குள்ளதானே...

## யாழ். கோட்டைப் பகுதியில் மீண்டும் இராணுவ முகாம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைப்பகுதியில் மீண் டும் இராணுவமுகாம் ஒன்று அமைக் கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடு களை யாழ்.இராணுவத் தலைமை யகம் மேற்கொண்டு வருகிறது.

மிகவிரைவில் மேற்படி பகுதி யில் புதிய இராணுவமுகாம் ஒன்று அமைப்பதென இராணுவத் தலை மையகம் தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டுள்ளது. இது தொடர் பான பணிப்புரையை இராணுவத் தலைமையகம், யாழ். படைத்தளப திக்கு அனுப்பியுள்ளது.

யாழ்.நகரில், ஞானம் விடுதியில் நிலைகொண்டிருக்கும் 512 ஆவது பிரிகேட் படையினரை அங்கிருந்து அகற்றி, மேற்படி பகுதியில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் இராணுவ முகாமில் நிலைகொள்ளவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், சுப்பிரமணியம் பூங்காவை இராணுவத்தினர் புனரமைத்து அதனை விரைவில் புதியதொரு பூங்காவாக மக்கள் பாவனைக்கு விடவுள்ளதாகவும், மேஜர் ஜெனரல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தரத் தீர்வுக்குப் பின்பே பாதுகாப்பு வலயம் அகற்றம்!

### யாழ்.மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா

(யாழ்ப்பாணம்)

"நிரந்தரமான தீர்வு ஏற்படும் வரை யாழ். மாவட்டத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மாற் றம் செய்ய முடியாது. நிரந்தரத் தீர்வு ஏற்பட்டதன் பின்புதான் உயர் பாதுகாப்பு வலயத்தினை முழுமை யாக அகற்ற முடியும்" - இவ்வாறு யாழ். மாவட்டத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற, சமாதானத்துக்கும் நல் லெண்ணத்துக்குமான மக்கள் குழு வின் விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார். உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட் டது. மக்களின் வாழ்வில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும், மக் களின் மீள்குடியமர்வுக்காகவும் - உயர் பாதுகாப்பு வலயத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்று யாழ். இரா ணுவத்தளபதியிடம் கோரப்பட்டது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் முக்கிய பிரமுகர்கள் நெடுந்தீவிலிருந்து வெளியேற்றம்?

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ஜெகன் உட்பட இக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலர் நெடுந்தீவிலிருந்து வெளியேறியுள்ளனர்.

நெடுந்தீவில் முகாமமைத்த மேற்படி கட்சியின் குழுவினருக்கு தலைமை தாங்கிய, கட்சியின் அமைப்பாளர் ஜெகன் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் அங்கிருந்து சில தினங்களுக்கு முன்னரே வெளி யேறிவிட்டனர். தற்போது சுமார் இருபத்தைந்து வரையிலான உறுப்பினர் கள் மட்டுமே அங்கு தங்கியிருப்பதாக, அங்கிருந்து கிடைக்கும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

(க)

# பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு செய்வதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் இரு தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் அடுத்தவருடத்திலிருந்து முழுமையாக அனைத்து முறைப்பாடுகளும் தமிழில் பதிவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என நேற்று நடைபெற்ற சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்றையதினம் 10.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் - பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் சிங்களத்தில்தான் பதிவு செய்யப்படுகின்றன எனவும், இவற்றைத் தமிழில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எட்வேட் விதானகேயிடம் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கைக்கு, யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதிலளிக்கையில், யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் இரு தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதுடன், இவர்கள் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நட்புறவுப் பாலமாக இருப்பதுடன், பொதுமக்களுடன் தமிழில் கலந்துரையாடி ஒரு மொழிபெயர்ப்பாளர்போல் இருப்பார்கள் எனவும், அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்து அனைத்துப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்படும் அனைத்து முறைப்பாடுகளும் தமிழில் பதிவுசெய்யப்படும் எனவும், இதற்கென புதிதாக தமிழ் தெரிந்த பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதெனவும் தெரிவித்தார்.

மேலும், கண்டபடி வீதியில் போக்குவரத்துச் செய்வோரை பொலிஸார் கைதுசெய்வதை நிறுத்தும்படியும் - சாரதி அனுமதிப்பத்திரம் பரிசோதிப்பதற்கான கால அவகாசத்தை அதிகரிக்கும்படியும் மக்கள் குழுப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர். இதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் - பொலிஸார் தற்போது வீதி ஒழுங்கு விதிகளை மீறுவோரை கைது செய்வதில்லை எனவும், அந்த இடத்தில் வைத்தே தண்டப்பணம் அறவிடப்படுவதாகவும் தெரிவித்ததுடன், மோட்டார் திணைக்களம் தம்மிடம் விண்ணப்பித்த விண்ணப்பங்களுக்கு - டிசெம்பர் 31 இற்குள் முழுமையாக சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்க முடியாது, இதற்கு கால அவகாசம் தேவை எனத் தெரிவிக்கும்பட்சத்தில், பொலிசாரும் சாரதி அனுமதிப் பத்திரம் பரிசோதிப்பதை இடைநிறுத்தும் காலக்கெடுவை அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்தார். (லி)

## ஓய்வு பெற்ற லங்கா சீமெந்து ஊழியருக்கு

சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற லங்கா சீமெந்து ஊழியர்கள் அனைவரும் - ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவற்றை மீளப்பெறுவதற்கு மேலதிக தகவல்கள் கொடுக்க வேண்டியுள்ளதால், இணுவிலில் உள்ள லங்கா சீமெந்து நிறுவன பிரிவுக் காரியாலயத்திற்கு சமுகம் தருமாறு சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஆர்.செல்வநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

**IEE COMPUTE DIVISION**
121/1, அரசடி வீதி, கந்தர்மடம்.
(கணினி மூலம் ஆங்கிலமொழி)
**ஆங்கிலம்**
கல்வியாண்டு - 2003
சிறுவர்களுக்கான தரம் - 3,4,5
விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
உடன் பதிவுசெய்யவும்
ஆசிரியர் -
(சி-276)
**VIOLET - RAMANATHASAN**

## யாழ்.கோட்டை...

சரத் பொன்சேகா நேற்று யாழ். நகரில் நடைபெற்ற சமாதானத்திற்கும் நல்லெண்ணத் திற்குமான ஆணைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அத்துடன், தெல்லிப்பளையிலுள்ள யூனியன் கல்லூரிக்கு அதிபரின் அனுமதியுடன் தினமும் சென்று வரலாம் எனவும், தாம் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்ற முடியாது எனவும், தேவை ஏற்படின் உயா பாதுகாப்பு வலயங்களில் மாற்றங்களைக் கொண்டுவரலாம் எனவும், குருநகரிலுள்ள இறங்குதுறையையும் கடற்கரை வீதியையும் மக்கள் பாவனைக்கு தொடர்ந்து அனுமதிக்கப்பட மாட்டாது எனவும், குருநகரில் ஐஸ் தொழிற்சாலை ஆரம்பிக்கும் பட்சத்தில் இதுகுறித்து மீள் பரிசீலனை செய்யமுடியும் எனவும் தெரிவித்தார்.

நேற்றைய மேற்படி கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் - வேலணை மத்திய கல்லூரிக்கு அருகிலிருக்கும் வீதியைத் திறக்கும் படி கோரிய போது, முன்னர் இவ்வீதி மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப் பட்டே இருந்தது, அண்மையில் இவ்வீதியால் விடுதலைப் புலிகளையும் அனுமதிக்க வேண்டும் என மக்கள் போராட்டம் நடத்தினர், இதிலிருந்தே இவ்வீதி மீண்டும் மூடப்பட்டது, வேலணை மத்திய கல்லூரிக்குச் செல்ல மூன்று வீதிகள் இருப்பதால், அவற்றினூடாக மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியும் என நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். (க,லி)

## நிரந்தரத் தீர்வு...

இதன்போது, யாழ்.குடாநாட்டு மக்களின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளுடன் ஒப்பிடும்போது உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினை ஐந்து சதவீதமானதே என்றும், தொண்ணூற்றைந்து சதவீதமான பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளது என்றும், தற்போது நடைபெறும் பேச்சுக்கள் மூலம் நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும் உயர் பாதுகாப்பு வலயம் முழுமையாக நீக்கப்படும் என்றும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறினார்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சுமார் ஏழாயிரம் வீடுகள் மட்டும் உள்ளன. ஆனால், உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே சுமாா ஐம்பதாயிரம் வீடுகள் வெறுமையாக உள்ளன. இவற்றில் எவரும் குடியமர இதுவரை முன்வரவில்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் குடாநாட்டு மக்களின் இயல்புவாழ்வைப் பாதிக்கும் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவர் டி.ஆர்.அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் - யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வண.பிதா பேணாட், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண.பிதா நேசக்குமார், யாழ். மாவட்ட குருமுதல்வர் வண. செல்வராஜா மற்றும்,

யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எட்வேட் விதானகே, வடபகுதி கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, மற்றும் 512 பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல் ரூபசிங்க, 51 ஆவது டிவிசன் துணைக் கட்டளை அதிகாரி கேணல் ரணசிங்க, கேணல் சில்வா ஆகிய அதிகாரிகளும், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் செயலாளர்களில் ஒருவரான - மனிதநேய அமைப்புகளின் தலைவர் பரமநாதன் ஆகியோரும் கைத்தொழில், வர்த்தக சங்கத்தலைவர் ஜெயசேகரமும், யாழ். ஆயர் இலலத்தில் நேற்றைய தினம் காலை 10.30 மணியிலிருந்து மதியம் 12.30 மணிவரை நடைபெற்ற சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டனர். (லி,க)

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

**வரவுசெலவுத் திட்டம் – 2003**

**2003 ஆம் ஆண்டுக்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்.மாநகர சபை வரவு - செலவுத்திட்டம், 2002 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12 ஆம் தகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு மாநகர சபை அலுவலகத்தில், பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தி.252), (212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.**

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*11.12.2002*

(சி-301)

# 41 ஆம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில் முத்தாக
16 - 06 - 1949

அன்னை மண்ணில் வித்தாக
02 - 11 - 2002

வீரனாய் யாருக்கும் தெரிந்தார் - பெரும்
வெற்றியின் செல்வனாய் திரிந்தார்
வீரரை விரைவினில் புரிந்தார் - இன்று
விறகினில் அவரே எரிந்தார்.

வேகமாய் சைக்கிளையும் ஓடினார் - பெரும்
வீரனாய் புகழையும் தேடினார்
விசிலால் தீர்ப்பையும் பாடினார் - இன்று
விதியால் விழிகளையே மூடினார்

எம் கண்களில் கண்ணீரோ கொஞ்சம் - எனி
இவர் காலடியே எமக்கொரு தஞ்சம்
எம் கவலைக்கும் இல்லையெனிப் பஞ்சம் - இவரை
எக் காலத்திலும் மறக்காது எம் நெஞ்சம்.

## அமரர் ஐ.செல்வராசா (செல்வம்)

(சைக்கிள் ஓட்ட சாதனை வீரர்,
பிரபல உதைபந்தாட்ட மத்தியஸ்தர்)

தமிழீழ விளையாட்டுத்துறை வீரர்கள்,
தமிழீழ மக்கள், யாழ்.மாவட்டம்.

(சி-302)

### உயர் பாதுகாப்பு வலயம் உட்பட முக்கிய பிரச்சினைகள்

# ஓமந்தையில் சனியன்று நடைபெறவுள்ள பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஆராய்வு!

பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு உப குழுவின் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை ஓமந்தையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக, உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரச்சினை ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது. இதைவிட, மீன்பிடிக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளும் இந்தப் பாதுகாப்பு உபகுழுவின் கூட்டத்தில் ஆராயப்படும்.

மாவட்ட ரீதியில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு உபகுழுக்களின் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் ஆராய்வதற்காக மாவட்டக் குழுக்களில் வரையப்பட்ட திட்ட வரைபுகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

ஓமந்தையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அரசாங்கத் தரப்புக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமை தாங்குவார்.

அத்துடன் முப்படைகளினதும் பிரதம தளபதிகள், பொலிஸ்மா அதிபர், முப்படைகளினதும் பிராந்தியக் கட்டளை அதிகாரிகள் ஆகியோரும் அரசுதரப்புக் குழுவில் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் தரப்பில் கேணல் கருணாவின் தலைமையில் உயாமட்டத் தளபதிகள் மற்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் கலந்துகொள்ளவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மரக்கறிச் சந்தைக்கு மின் வசதியை ஏற்படுத்தக் கோரிக்கை

யாழ்.மரக்கறிச் சந்தை தற்பொழுது முழுநேரச் சந்தையாக செயற்படுவதால் - இச்சந்தைக்கு மின் இணைப்பு ஏற்படுத்த உடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி மாநகராட்சி மன்ற உறுப்பினர் எஸ். விஜயரட்ணத்தால் மாநகராட்சிமன்ற ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

## பட்ஜெட் நிறைவேற்றம்

அடுத்தாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் 36 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. இதற்கு ஆதரவாக ஈ.பி.டி.பி., தமிழ்க் கூட்டமைப்பு, புளொட் ஆகிய கட்சிகள் வாக்களித்தன. எதிர்த்து பொதுஜன முன்ணணியும் ஜேவிபியும் வாக்களிததன.

# புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் நாட்டின் பாதுகாப்பு நிலை பாதிப்பு!

### படையதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் நாட்டின் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகப் படையதிகாரிகள் சிலர் குற்றஞ் சுமத்தியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பின்னர் நாட்டின் பாதுகாப்பில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் உடனடியாகவும், துரிதமாகவும் இராணுவக் கட்டமைப்பை மீள்கட்டுமாணம் செய்ய வேண்டும்.

பாதுகாப்பு, மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல் செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயக்கம் காட்டிவருகின்றார். இந்த வருட இறுதிக்குள் இரண்டு ஆட்சேர்ப்புக்களை நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின்பேரில் சபை இடைநிறுத்தப்பட்டது.

இவையெல்லாம் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் சவால்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே உடனடியாக பாதுகாப்பு மறுசீரமைப்பு திட்டம் அமுலாக்கப்பட வேண்டும் எனவும் அப்படையதிகாரிகள் கூறியுள்ளனர்.

### 'புலிகளின் குரல்' ஒலிபரப்பு சாதனங்களை

# வன்னிக்கு எடுத்துச் செல்ல உதவி; இலங்கை அரசிற்கு இந்தியா எதிர்ப்பு!

(கொழும்பு)

'புலிகளின் குரல்' வானொலி ஒலிபரப்புத் தரத்தை உயர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் உதவியுள்ளது குறித்து இந்திய வெளியுறவுச் செயலர் கன்வால் சிபால் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசிய போது, இது தொடர்பான விளக்கங்களை சிபால் கோரியதாகவும் தெரியவருகின்றது. அத்துடன் புலிகளின் குரல் வானொலிக்குரிய ஒலிபரப்பு சாதனங்களை இறக்குமதி செய்தது தொடர்பாக அரசின் பின்னணி குறித்தும் அவர் விசாரித்துள்ளார்.

புலிகளுக்கு இந்த நவீன தொழிலநுட்ப சாதனங்கள் கிடைத்திருப்பது இந்தியாவுக்கு மட்டுமன்றி இந்தப் பிராந்தியத்துக்கே ஆபத்தான விடயம் என்றும் - இதன் மூலம் புலிகள் தமது பிரச்சாரங்களை இந்தியாவிலும் மேற்கொள்ளலாம் என்று கன்வால் சிபால் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்திய தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில்,

இந்த விவகாரம் தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலர் கன்வால் சிபால், ஜனாதிபதி சந்திரிகா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோருடனும் ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# புலிகளின் நீதி பரிபாலன நடைமுறை குறித்து அவுஸ். பிரதம நீதியரசர் இன்று ஆராய்வார்!

(கொழும்பு நிருபர்)

அவுஸ்ரேலியாவின் பிரதம நீதியரசர் மார்க்கஸ் என் பீல்ட் இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையின் சட்டமுறைமைகள் மற்றும் நீதித் துறையுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து ஆராய்தவற்காக இங்கு வந்துள்ள அவுஸ்ரேலிய பிரதம நீதியரசர், கொழும்பில் பல்வேறு முக்கியஸ்தர்களுடனும் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

நீதித்துறையுடன் தொடர்புடையவர்களுடனும், மனித உரிமை அமைப்புப் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தியுள்ள இவர், நேற்றையதினம் மலையகத் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

இன்று, கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, புலிகளின் முக்கிய பிரமுகர்களுடன் அவுஸ்ரேலிய பிரதம நீதியரசர் கலந்துரையாடுவார் எனத் தெரியவருகின்றது. குறிப்பாக, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைமுறையில் உள்ள நீதிமன்றச் சட்டங்கள், நீதி பரிபாலன முறைமைகள் தொடர்பாக - இப்பேச்சுக்கள் அமையலாம் எனத் தெரியவருகிறது. புலிகளின் நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா உடனான சந்திப்பும் இடம்பெறும் எனவும் தெரியவருகிறது.

# அரசாங்க ஊழியர் ஆட்குறைப்பு இடம்பெறாது என்கிறார் அமைச்சர்

உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் அரச ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்யவுள்ளதாக கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை என்று பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரச நிர்வாகத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கு 198 மில்லியன் டொலர்களை உலக வங்கி வழங்க முன்வந்துள்ளது. இதன்மூலம் நிர்வாக கட்டமைப்புக்கள் மறுசீரமைப்புச் செய்யப்படுமே தவிர ஆட்குறைப்பு இடம்பெறாது.

அரச ஊழியர்களுக்கென 25 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதான அரசின் திட்டத்திற்கு உதவ மலேசிய அரசாங்கம் முன் வந்துள்ளதாகவும் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவத்துள்ளார்.

மொனராகல மாவட்டத்தில் அரச ஊழியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஜேர்மனிய வெளியுறவு அதிகாரி விடுதலைப் புலிகளைச் சந்திப்பார்

(கொழும்பு)

ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசியப் பிராந் திய திணைக்களப் பணிப்பாளர் கிறிஸ் ரோப்ஜ் முல்லர் வன்னி மற்றும் யாழ்ப்பாணப்பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கடந்த திங்களன்று கொழும்பை வந்தடைந்த ஜேர்மனிய அதிகாரி முல்லர் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். தற்போதைய சமாதான முயற்சிகள் மற்றும் தென்னாசியப் பிராந்தியத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் குறித்தும் அதிகாரிகளுடன் அப்போது ஆராயப்பட்டது.

இவர், கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பிரமுகர்களையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழ்க் குழுவினர் தாக்கியதில் இரு குடும்பஸ்தர்கள் காயம்

மட்டக்களப்பில் விசேட அதிரடிப் படையுடன் இணைந்து இயங்கும் ரெலோ அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற வரதன் குழுவினர் இரு குடும்பஸ்தர்களை கடுமையாக தாக்கியுள்ளனர். படுகாயமடைந்த இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆரையம்பதி பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் குறுந்திரைப்படங்களும் சர்வதேச விழாவிற்கு அனுப்பலாம்

(லண்டன்)

ஐரோப்பிய திரைப்பட விழாவில் குறுந்திரைப்படங்களைக் காட்சியிட விரும்புவோருக்கு அழைப்புவிடுக்கப் பட்டுள்ளது.

சுவிஸ், லண்டன் ஆகிய இடங்களில் இந்த விழாவுக்கு ஏற்பாடுகள் நடத்தப்பட்டுள்ளன. சுவிஸில் எதிர் வரும் 15ஆம் திகதி இந்த குறுந் திரைப்பட விழா நடைபெறவுள்ளது. இதையடுத்து லண்டனிலும் இவ்விழா நடைபெறும்.

இவ்விழாவில் குறுந்திரைப்படங்களைக் காட்சியிட விரும்புவோர் எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் தெரிவு செய்யப்படும் 3 குறுந்திரைப்படங்களுக்கு பரிசுகளும., கேடயமும் வழங்கப்படும். மேலும 10 குறுந்திரைப் படங்களுக்குச் சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.

அத்துடன் தெரிவுசெய்யப்படும் குறுந்திரைப்படங்கள் ஐரோப்பிய திரைப்படவிழா மற்றும் சர்வதேச திரைப்படவிழாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




தண்ணீரை நன்கு கொதிக்க வைத்துக் குடியுங்கள். தற்போது கிணறுகளுக்கு குளோரின் இடுவது பெரிதும் பலனளிக்காது.

~ தமிழீழ சுகாதார சேவை.


# தென்கடலில் கடற்படையின் 'டோறா' இத்தாலிக்கு ஆட்கள் செல்ல உதவியது!

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்வோருக்கு - லஞ்சம் பெற்றுக் கொண்டு உதவி வழங்கியது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில், 12 கடற்படையினரைக் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தென்பகுதிக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள, பி - 204 இலக்க கடற்படை 'டோறா' கலத்தில் பணிபுரியும் 12 கடற்படையினரைக் கைது செய்யவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இவர்களைக் கைது செய்வதற்கான உத்தரவு நேற்றுமுன்தினம் இரவு வழங்கப்பட்டிருக்கின்றது. 'டோறா' கலத்தில் பணியாற்றும் 12 கடற்படையினரும் தலா 7 லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட பின்னர் - இத்தாலிக்குச் சட்டவிரோதமாக செல்வோரை ஏற்றிச் செல்லும் மீன்பிடிக் கலங்களை அனுமதித்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## அரியாலையில் மீண்டும் சனசமூகநிலையத்தின் பாலர் பாடசாலை

அரியாலை சனசமூக நிலைய பாலர் பாடசாலை கடந்த 7 வருடங்களின் பின் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மீண்டும் இயங்கவுள்ளது.

அமரர் குலசிங்கம் ஞாபகார்த்த மண்டபத்தில், காசிப்பிள்ளை - அன்னலட்சுமி ஞாபகார்த்த பாலர் பாடசாலை புதிய போதிய தளபாடங்களுடனும், தரமான ஆசிரியையின் கற்பித்தலுடனும் ஆரம்பமாகவுள்ளது.

### இத்தாலி செல்ல முயன்று

# கைது செய்யப்பட்டவர்களில் வான்படை, பொலிஸ் அதிகாரிகள்!

சடடவிரோதமாக இத்தாலி செல்ல முயன்று, பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒரு விமானப்படை அதிகாரியும், நான்கு பொலிஸாரும் அடங்குவதாக பொலிஸ வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட பொலிஸாரில் இருவர் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர்களாவார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விமானப்படை அதிகாரியிளைறு லெப்ரிணன்ட் தரத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. இவரை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை - கைது செய்யப்பட்ட 65 பேர் குறித்தும் பொலிஸார் தனிப்பட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# நாடாளுமன்ற நடப்புகள்



## பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதத்திலிருந்து...

**❑ சுசந்த புஞ்சிநிலமே (சிறு கைத்தொழில் அமைச்சர்)**

பழைய கதைகளைத் தோண்டிப் பார்க்கும் எதிர்க்கட்சிகள் தமது ஆட்கள் வங்கிகளில் மில்லியன் கணக்கிலான ரூபாய்களை முதலீடு செய்து கொண்டிருந்தபோது, தமது வாகனங்களுக்குப் பெற்றோல் பெறமுடியாது அலைந்த பொதுமக்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

எதிர்க்கட்சி, சமஷ்டி தொடர்பான கருத்துக்களைத் திரிவுபடுத்தி வருகின்றது. யுத்தம் சார் பான மக்களின் மனோபாவம் மாற நீண்டகாலம் செல்லும். இது தீவிரமான பிரச்சினையும் கூட. யுத்தம் நடந்த நாடுகளில் இந்த நிலை இருந்தது.

பாதுகாப்புடன் தொடர்புடைய துறைகளில் ஊழல்கள், மோசடிகளை தடுக்க வேண்டும். சில ஊழல் செய்யும் அதிகாரிகள் யுத்த நிறுத்தத்தைக் கூடக் குழப்ப முயல்வார்கள்.

**❑ விமல் வீரவன்ச (ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்)**



நாட்டைக் பிளவுபடுத்தும் அரசாங்கத்தை மாற்றவேண்டும். புலிகளுக்கு அரசாங்கம் சமஷ்டித் தீர்வைக் கொடுக்கப்போவதில்லை. கனடிய முறையிலான கூட்டாட்சியையே வழங்கப்போகிறது.

அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற வெளிநாடுகள் நிர்ப்பந்தங்கள் மூலம் சிறிய தனிப்பட்ட நாடுகளின் ஒற்றுமையைக் குலைக்க முயல்கின்றன. சமஷ்டித் தீர்வு நாட்டைப் பிளவுபடுத்தும். தேசிய பாதுகாப்புக் குறித்து நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த சமஷ்டி பெரும் ஆபத்தை ஏற்படுத்தப் போகின்றது.



**❑ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்)**

பயங்கரவாதத் தடைச்சட்டம் பயங்கரவாதிகளைத் தண்டிக்கவே உருவாக்கப்பட்டது. ஆனால், பயங்கரவாதம் என்ற போர்வையில் தனிநபர்களே அதிகமாகத் தண்டிக்கப்பட்டனர். பயங்கரவாதம் தொடர்பான அர்த்தம் வரையறுக்கப்படட முடியாதது.

**❑ தினேஷ் குணவர்த்தன (பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்)**

இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு புலிகள் கோருகின்றனர். இது பாதுகாப்புக்குப் பலத்த பிரச்சினையாகும். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். முப்படைகளுக்குள்ளும் பிளவுகளை ஏற்படுத்தாமல் அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டும்.

**❑ திலக் மாரப்பன (பாதுகாப்பு அமைச்சர்)**



அனைத்துப் பிரச்சினைகளையும் நாம் உணர்ந்தேயிருக்கின்றோம். நாடு முழுவதுமே யுத்தநிறுத்தத்தால் அமைதியாக இருக்கிறது. அமைதியைக் குழப்ப எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கத்தயங்காது.

புலிகளில் பல பிரிவுகள், போராளிகள் இருக்கிறார்கள். அவர்களிலும் வித்தியாசமான கருத்துடையவர்கள் இருக்கின்றார்கள். அவர்களைக் கட்டுப்ப டுத்துவதிலும் பல பிரச்சினைகள் இருக்கலாம். இது தொடர்பாக புலிகளின் தலைமையுடன் அடிககடி கலந்துரையாடி வருகின்றோம்.

இராணுவப் புலனாய்வுச் சேவையை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்மூலம் இந்தப் புலனாய்வு அமைப்பை மட்டுமன்றி இராணுவத்தினையே தொழில்சார் இராணுவமாகக் கட்டியெழுப்பத் திட்டமிட்டிருக்கின்றோம்.

# உயர் தொழில்நுட்ப நிறுவன பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

(கொக்குவில் மேற்கு)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பகல் நேர, பகுதி நேர கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைத் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்களுக்கும், தேசிய வியாபார கல்வி டிப்ளோமா, தேசிய வியாபார நிதியியல் டிப்ளோமா 1ம் , 2ம் வருடமாணவர்களுக்கு 20 ஆம் திகதியும்,

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 1ம், 2ம் வருடமாணவர்களுக்கு 30 ஆம் திகதியும், 3ம், 4ம் வருட மாணவர்களுக்கு 27 ஆம் திகதியும், தேசிய ஆங்கில டிப்ளோமா 1ம் 2ம் வருட மாணவர்களுக்கு 30 ஆம் திகதியும் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன.

இவர்களுக்கான தேர்வுச் சுட்டெண்களை கல்லூரிக் காரியால யத்தில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (108)

# மூன்று இலங்கை அகதிகள் ராமேஸ்வரம் வந்தடைந்தனர்

## மண்டபம் அகதி முகாமில் சேர்ப்பு

மன்னாரைச் சேர்ந்த மூன்று பேர் அகதிகளாக இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்துள்ளனர். கடந்த சனியன்று இராமேஸ்வரத்தின் தங்கச்சிமடம் பகுதியை இவர்கள் சென்றடைந்துள்ளனர்.

இவர்களை தமிழக கியூ பிரிவு பொலிசார் விசாரித்து வருகின்றனர். அம்சாத், அஸ்வான், யோகலஷ்மி ஆகியோரே அகதிகளாக இராமே ஸ்வரம் வந்துள்ளனர் எனப் பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர்கள் இப்போது மண்டபம் அகதிமுகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

# மறு சீரமைக்கப்படவுள்ள சுகாதார எழுதுவினைஞர் சேவை

சுகாதார சேவை எழுதுவினைஞர்களுக்கான அடிப்படைக் கல்வித் தகைமையை க.பொ.த.(உ/த) மாக நிர்ணயிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் க.பொ.த சாதாரண தரமே, சுகாதார சேவை எழுதுவினைஞருக்கான அடிப்படைத் தகைமையாக இருந்து வந்தது. இதனை மாற்றியமைத்து, சுகாதார எழுதுவினைஞர் சேவை என்ற பெயருக்குப் பதிலாகப் புதிய உத்தியோகப்பெயர் ஒன்றும் வழங் கப்படவுள்ளது.

இந்தப் புதிய சேவையின் கீழ் இலங்கை முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளிலும், சுகாதாரத் திணைக்களங்களிலும் கடமை யாற்றும் அனைத்து எழுதுவினைஞர்களும் ஒன்றிணைக்கப்படவுள்ளனர்.

இப்புதிய சேவையின் கீழ் உள்வாங்கப்படவுள்ளவர்களுக்கான சம்பள உயர்வு குறித்தும் சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


# STUDY IN INDIA

## Admission Notice - Year 2003

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### MUTHAYAMMAL College of Arts& Science affiliated to PERIYAR UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. Biocemistry | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc. Biotechnology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Physics | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Microbiology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Com. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Cs | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.B.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.C.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY ( Channai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.SC. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

### நீங்கள் O/L முடித்துவிட்டீர்களா???

இந்தியாவில் Diploma (3வருடம்) பயிற்சி நெறியில் சேர்ந்து, பின் ANNA UNIVERSITY (மேலும் 2 வருடம்) பயின்று பட்டதாரியாக (Graduate/ Degree Holder) வாய்ப்பு.

**3 Years Diploma in**

- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- COMPUTER TECHNOLOGY
- ELECTRONICS & COMMUNICATION
- AUTOMOBILE
- INFORMATION TECHNOLOGY
- ELECTRONICS & INSTRUMENTATION*

**MUTHAYAMMAL POLYTECHNIC**
Rasipuram - 637 408, Namakkal Dt, T.N, India

S.K.Ads&Prints Sugee

◈ Separate Hostel for Boys & Girls and with all Meals ◈ All necessary VISA formalities will be handled by the College

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, 'Colombo Plaza', 50 Galle Road, Colombo-06.
Tel: 072-984297 074-512468

# யாழ்ப்பாண மாவட்ட பிரதேசஞ்சார்ந்த அபிவிருத்தியில் கொடிகாமத்தின் பங்கு

## ஓர் பிராந்தியத் திட்டமிடல் ஆய்வு


யாழ்.மாவட்டத்தில் இடஞ்சார்பு அபிவிருத்தி என்பது மாவட்டத்தின் புவியியல் பரப்புக்கும் அதன் சனத்தொகை பரம்பலுக்கும் இடையிலான பொருளாதார உறவு எனச் சுருக்கமாக வரையறுக்கலாம். இவ் இடஞ்சார்பு அபிவிருத்தியினை நன்கு ஆராய்ந்து, எமது பொருளாதார வளங்களை திட்டமிடுவோமாயின், தேவையற்ற செலவுகளைக் குறைத்து, வினைத்திறன் மிகக சமூக அமைப்பினையும் அதன் கட்டுமானத்தினையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

தற்பொழுது பேரழிவுமிக்க சேதங்களை அடைந்துள்ள தென்மராட்சிப் பிரதேசத்திலே, புனரமைப்பு - புனர்வாழ்வு என்பது மிகப்பெரும் வேலைத்திட்டமாக நடைபெற வேண்டியுள்ளது. இந்நிலையில், யாழ்ப்பாண மாவட்ட இடஞ்சார்பு அபிவிருத்தி ஒழுங்கில் கொடிகாமத்தின் பங்கினை ஆராய வேண்டியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து பிரித்து புதிதாக 1978 இல்- முல்லைத்தீவு மாவட்டமும், 1983இல்- கிளிநொச்சி மாவட்டமும் உருவாக்கப்பட்டதனால், யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலப்பரப்பு 2469 சதுர கிலோ மீற்றரிலிருந்து, 1953 சதுர கிலோ மீற்றராகக் குறைவடைந்தது. யாழ்.மாவடடத்தில் தற்போதைய நிலப்பரப்பானது, இம் மாவட்டம் 1978இல் கொண்டிருந்த நிலப்பரப்பின் 40 சதவீதமாகும். மேலும், குடாநாட்டின் ஒரு பகுதியான பச்சிலைப் பள்ளி, கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியாகவுள்ளது. 1981இல் எடுத்த குடிசனக்கணிப்புப்படி, யாழ்ப்பாண மாவட்டம் தற்போதைய கிளிநொச்சி மாவட்டம் உட்பட 8,31,112 பேரைக் கொண்டிருந்தது. மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பொழுது, யாழ்ப்பாண மாவட்டம் 7,38,787 பேரையும் புதிய கிளிநொச்சி மாவட்டம் 92,325 பேரையும் கொண்டிருந்தன. கிளிநொச்சி மாவட்டம், பிரிவினைக்குப் பின்னர்- யாழ்ப்பாண மாவட்டத்தின் 11.1 வீத மக்களையும் 54 வீத நிலப்பரப்பையும் பெற, யாழ்ப்பாண மாவட்டம் 88.9 வீத மக்களையும் 46 வீத நிலப்பரப்பையும் பெற்றது. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் குடிசனவடர்த்தி (1981 இல்) சதுர கிலோமீற்றருக்கு முறையே 83 பேராகவும் 725 பேராகவும் இருந்தது.

புதிய நிர்வாக மாவட்டங்கள் உருவாககப்பட்டதனால், யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் உள்ளிருந்த பெருநிலப் பகுதி நிலக்குடியேற்றங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், விவசாயப்பரப்புக்கள், காட்டுப்பகுதிகள், அபிவிருத்தி செய்யக் கூடிய நிலங்கள் மற்றும் பச்சிலைப்பள்ளி தென்னந்தோட்டப் பகுதிகள் போன்றவை மாவட்ட நிர்வாகத்துக்கு வெளியில் சென்றுவிட்டன. யாழ்ப்பாண மாவட்டத்து அபிவிருத்தி முயற்சியில், கடந்த 50 ஆண்டுகள் வரை, பெருநிலப்பகுதி அபிவிருத்தியே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதய அமைப்பில், இதுவரை கடைப்பிடித்து வந்த அபிவிருத்தி திறமுறை மேலும் பொருத்தமானதாக இருக்காது. தற்போதய யாழ்.மாவட்டம், பெரிய குடிசனத் தொகையையும் உயிர்வாழ் குடிசனவடர்த்தியையும், 40 வீதத்திற்கு மேற்பட்ட நகரப் பகுதியையும், கூடுதலான விவசாயச் சார்பில்லாத கிராமிய மக்களையும் கொண்டு காணப்படுகிறது. மாவட்டத்தின் இன்றைய பொருளாதார அமைப்பில் - விவசாயம், மீன்பிடி ஆகியவற்றுடன்சிறு கைத்தொழில்களும் சேவைத் தொழில்களும முக்கியத்துவம் பெற்றுள்ளன. 1984 க்குப் பின்னர் தொடர்ந்து இடம் பெற்றுவரும் போரினால், மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இன்று, வெளிநாடுகளிலிருந்து இப்பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் இங்கு அனுப்பும் பணம் மற்றும் உள்ளூர் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றனவே மாவட்டப் பொருளாதாரச் செயற்பாட்டில் மிக முக்கியபங்கினை வகிக்கின்றன.

மாவட்டத்தின் இடஞ்சார்பு அபிவிருத்தியை நோக்கமுன், துறைசார்பு அபிவிருத்தி வாய்ப்புக்களை நோக்குமிடத்து, விவசாயத்துறையை மேலும் விருத்தியாக்க, நிலப்பற்றாக்குறை பெரும் தடையாக இருக்கின்றது. மாவட்டத்தில், குறிப்பாக- வலிகாமம் செம்மண் பிரதேசத்தில் விவசாயத்துக்குக் கீழ் இருக்கும் நிலப்பரப்புக்கள் படிப்படியாக வாழ்விடத்தேவைக்கு மாற்ற ப்பட்டு வருவதால் விவசாய நிலம் குறைவடைந்து வருகிறது. மேலும், புதிய விவசாய நிலங்களைப் பெறுவதும் கடினமா




கும். மாவட்டத்தினுள் மூன்று வகையான எல்லை நிலங்கள் காணப்படுகின்றன. அவை யாவன.

1. கலட்டுக் காணிகள் (கற்பாங்கான பிரதேசம்)
2. மணற் பிரதேசம்
3. தாழ்நிலத் தரவைகளும் சதுப்பு நிலங்களும்.

கலட்டுக் காணிகள், வலிகாமம் பகுதியில் குறிப்பாக அச்சுவேலி - தெல்லிப்பளை - பண்டத்தரிப்பு றோட்டுக்கும், வடக்கு கடற்கரைக்கு இடைப்பட்ட பகுதியில் காணப்படுகின்றன. இக்கலட்டுக் காணிகளில் கல்லுக் கிளறி எடுக்கப்பட்டு, பின்னர் மேல்மண்ணிட்டுத் தோட்டக்காணிகளாக அவை மாற்றப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் 10,000 ஏக்கர் கலட்டுக் காணிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இக்காணிகளைப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றதாக மாற்றியமைப்பது மிகவும் செலவுமிக்கதொன்றாகும். பயன்படுத்தப்படாத மணற் காணிகள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் காணப்படுகின்றன. இக் காணிகளில் பெரியளவில் பயிர்ச்செய்கை செய்ய முடியாது. தரவைக் காணிகள் உவர்த்தன்மை மிக்கதாகவும், மழைகாலத்தில் வெள்ளம் தேங்குவதாலும் பயிர்ச்செய்கைகளுக்குப் பொருத்தமற்றதாகவுள்ளன. மேலும், மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் மிகவும் குறைவாகவிருப்பதால் விவசாயம் சார்பான நிலை அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது கடினமாகும். மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தி- நவீனப்படுத்தலிலும், புதிய பயிர்களை அறிமுகம் செய்தலிலுமே தங்கியுள்ளது. இம் மாவட்டத்தில் 13,000 பேர் நேரடியாக மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நேரடியாகவும், எதிர்மறையாகவும் ஒரு லட்சம் பேர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அண்மைக்கால யுத்த நிகழ்வுகளால் மீன்பிடித்தொழில் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இம் மாவட்டத்தில் மீன்பிடித்தொழில் விருத்திக்கு ஏற்ற, நல்ல வாய்ப்புக்கள் இருப்பதால் இத்தொழிலைப் புனரமைப்புச் செய்தல், எதிர்காலத்தில் முக்கியதொரு நடவடிக்கையாக இருக்க வேண்டும். தற்போது மீன்பிடிக்கு இருக்கும் இராணுவத்தடைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கடற்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கான அனுமதி என்பவை விலக்கப்பட்டு பூரண அளவில் எமது கடற்பிரதேசத்தில் மீன்பிடிக் கைத்தொழில் விரிவு செய்யப்படவேண்டியது, எம் முன் உள்ள அவசியமான வேலைத்திட்டமாகும்.

இம்மாவட்டத்தில் எதிர்காலப் பொருளாதாரம், கைத்தொழில், சேவைத்தொழில் வளர்ச்சியிலேயே கூடுதலாகத் தங்கியுள்ளது. சிறிய பல கைத்தொழில்கள் வளர்ச்சிக்கு இங்கு நல்ல வாய்ப்புண்டு. மாவட்டப் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கு உதவியாக போக்குவரத்து துறைமுகம், வீடமைப்பு துறைகளின் வளர்ச்சியிலும் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

துறைசார் அபிவிருத்தியுடன்- மாவட்டத்தில், இந்தியா சேது சமூத்திரத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தினால் காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.இடஞ்சார்பு அபிவிருத்தி ஏற்படுத்தப்படுமிடத்து, அது பல சமூக பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், மூலவளங்களை நல்ல முறையில் பயன்படுத்தவும், பிரதேச ரீதியில் சமமான அபிவிருத்தியைத் தோற்றுவிக்கவும் உதவும். யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேசரீதியில் காணப்படும் பல பிரச்சினைக ளுக்குத் தீர்வுகாண, மாவட்டத்திற்குப் பொருத்தமான இடஞ்சார்பு அபிவிருத்தித் திறமையொன்று மேற கொள்ளப்படல் வேண்டும். மாவடடத்தின் மேற்குப் பகுதிக்கும் கிழக்குப்பகுதிக்குமிடையே காணப்படும் வேறுபாட்டைக் குறைக்கவும், தீவுப்பகுதியின் சமூக - பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப் படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேணடும். யாழ்ப்பாண மாவட்டத்தின் கிழக்குப்பகுதி குறிப்பாக, கொடிகாமம் பகுதி ஒப்பீட்டு ரீதியில் அபிவிருத்தி வாய்ப்புகளைக் கொண்டு காணப்படுகின்றது.




யாழ்ப்பாணத்தின் மேற்குப்பகுதி ஏழு பிரதேச செயலகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம், நல்லூர் பிரிவுகள் யாழ்ப்பாண நகரத்தையும் அயற்கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளன. இவ்விரு பிரிவுகளும் உள்ளடக்கும் பிரசேத்தைப் பெரிய யாழ்ப்பாணம் என அழைக்கலாம். ஏனைய ஐந்து பிரதேச செயலகங்கள் வலிகாமம் பகுதியை உள்ளடக்குகின்றன. வலிகாமம் பகுதியில் மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்வதுடன் சிக்கலானதும் செறிவானதுமான நிலப் பயன்பாடும் நிலவாட்சி முறைகளும் காணப் படுகின்றன. நிலப்பற்றாக்குறை, நிலப்பயன்பாட்டு மாற்றங்கள், நீர் உவர்த்தன்மையாதல் போன்றன இங்கு காணப்படும் முக்கிய பிரச்சினைகளாகவுள்ளன. இப்பகுதியில் காணப்படும் குடிசனத்தொகையைக் குறைப்பதற்கு, குடிசன இடப்பெயர்வு மாவட்டத்துக்கு வெளியும், உள்ளும் ஊக்குவிக்கப்பட வேண்டும். மாவட்டத்தின் மேற்குப்பகுதியிலிருந்து கிழக்குப்பகுதிக்கு மக்கள் இடம் பெயர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந் நோக்கத்தை நிறைவேற்ற கொடிகாமத்தை முக்கியதொரு நகரமாக விருத்தியாக்க வேண்டும். யாழ்ப்பாண நகரத்திற்கு அடுத்து கொடிகாமம் இரண்டாவது முக்கிய நகரமாக விருத்தியாக்க கூடிய வாய்ப்புக்கள், வளங்கள் கொண்டு காணப் படுகின்றது. தீவுப்பகுதி இயற்கை வளம் குறைந்தும் பொருளாதாரரீதியில் பின் தங்கிய பகுதியாகவும் உள்ளது. தீவுப்பகுதியின் வளர்ச்சியை நன்னீர் பற்றாக்குறைவு, போக்குவரத்துச் சீரின்மை, குடிசன வெளியேற்றம் போன்றன பெருமளவு பாதித்து வருகின்றன. மேலும், ஒவ்வொரு தீவிலும் காணப்படும் பிரசசினைகள் ஒன்றுடன் ஒன்று சற்று வேறுபட்டுக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் குறிப்பாக தென்மராட்சி, வடமராட்சிப் பிரிவுகளின் பெரிய நகரமாக விருத்தி செய்வதற்குச் சாதகமாயிருக்கும் காரணிகள் பின்வருமாறு:-

1. கொடிகாமம் ஏற்கனவே சிறிய சந்தை நிலையமாக விருப்பதுடன் தென்மராட்சி கிழக்கின் பிரதான சேவைகளை வழங்கும் நிலையமாகவுமுள்ளது

2. வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் போக்குவரத்து முக்கிய இடத்தைப் பெறறுள்ளது. வடமராட்சி மக்கள் கொடிகாமம் ஊடாகவே தென்பகுதிக்கான பிரயாணங்களை மேற்கொள்கின்றார்கள்.

3. கொடிகாமம் பகுதியைச் சூழவுள்ள நிலப்பகுதி விவசாய வளம் குறைந்த மணற்பிரதேசமாகவும் தரவைப் பகுதியாகவும் இருப்பதால் கைத்தொழில், வீடமைப்புக்குத் தேவையான நிலங்களைப் பெறக் கூடியதாக இருக்கும்.

4. கொடிகாமம் நகர வளர்ச்சிக்குத் தேவையான நன்னீரை மணற்காட்டுப் பிரதேசததிலிருந்து பெறலாம். சந்தை, நகர நீர் விநியோகத் திட்டத்தில் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகியவற்றுடன் கொடிகாமத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். நகர நீர் விநியோகத் திட்டம் தற்பொழுது கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறது.

5 வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இரு பிரிவுகளுக்கும், குறிப்பாக- இவ் விருபிரிவுகளின் வளர்ச்சியடையாத கிழக்குப் பிராந்தியங்களுக்கு மத்தியில் கொடிகாமம் அமைந்திருப்பதால், இப் பிரதேசங்களின் வளர்ச்சிக்கு இந்நகர் விருத்தி பெரும்பங்காற்ற முடியும்.

கொடிகாமத்தின் அபிவிருத்திப் பிரதேசம்- கொடிகாமம், கச்சாய், உசன், எழுதுமட்டுவாள், மிருசுவில், நாவற்காடு, இடைக்குறிச்சி, இயற்றாலை, மந்துவில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

கொடிகாமத்தையும் அதன் அயற்பகுதிகளையும் விருத்தியாக்கப் பின்வரும் திறமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

1. யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பான நகருக்கு அடுத்து கொடிகாமத்தை இரண்டாவது நிர்வாக நிலையமாகக் கணிக்க வேண்டும்.

2. யாழ்ப்பாணக் கிழக்குப் பிரதேசத்திற்கான பல பொதுச்சேவை நிறுவனங்கள், காரியாலயங்கள் போன்றன கொடிகாமத்தில் அமைக்கப்படவேண்டும்.

3. கொடிகாமப் பிரதேசத்தில் கைத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் அங்கு கைத்தொழில் பேட்டையொன்று அமைக்கப்படல்வேண்டும்.

4. இப்பகுதியில் பெரிய வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, யாழ்ப்பாணம் மேற்குப் பகுதியிலிருந்து கூடியளவு மக்களைப் புதிய கொடிகாமம் நகருக்கு இடம் பெயர வைக்கவேண்டும்.

5. குடாநாடு முழுவதையும் இணைத்த நகரங்களுக்கிடையிலான புகையிரதப் போக்குவரத்தொன்று உருவாக்க வேண்டும். கொடிகாமம் - பருத்தித்துறை, பருத்தித்துறை -காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கிடையே புகையிரதப்பாதை அமைக்கப்படல்வேண்டும்.

6. கொடிகாமம் பஸ் டிப்போ ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.

7. முக்கிய கலை, கலாசார மண்டபங்கள் சில கொடிகாமத்தில் இடவமைவு பெற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட திறமுறைகள் நல்ல முறையில் கடைப் பிடிக்கப்படுமிடத்து கொடிகாமம் நகரும், கொடிகாமப் பிரதேசமும் வளர்ச்சி பெறுவதுடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது காணப்படும் பிரதேச வேறுபாடுகள் குறைய வழியேற்படுவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் அவை வழிவகுக்கும்.

பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்


# தொழில்வங்கி



| நிறுவனம் | சிறுவர் பாதுகாப்பு நிதியம் | ஒக்ஸ்பாம் |
|---|---|---|
| வெற்றிடங்கள் | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | நிர்வாக அலுவலர் (வவுனியா)<br>திட்ட உதவியாளர் (திருகோணமலை)<br>திட்ட உதவியாளர் (கொழும்பு) |
| அடிப்படைத் தகுதி | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மானிடத்துறை/ கல்வியியல் பட்டம் | குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம்<br>க.பொ.த உயர்தரக் கல்வி |
| விண்ணப்ப முடிவுத்திகதி | 21-12-2002 | 16-12-2002 |

**தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிகத் தகவல்களைப் பெற விரும்புவோர்- " நமது ஈழநாடு" அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.**

# சூழலைக் காக்கும் அனுமதிப்பத்திரங்கள்



ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகள், சுற்றுச் சூழலை பேணும் நோக்குடன், 2005 ஆம் ஆண்டு முதல் சூழலைப் பாதிக்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு அவற்றின் கழிவுகளின் அளவுக்கேற்ப அனுமதிப் பத்திரத்தினை விற்பனை செய்வதற்கான சந்தையினை ஆரம்பிக்கவுள்ளது.

சக்திவளம், இரும்பு, சீமெந்து கண்ணாடி, செங்கட்டி, பத்திரிகைகள், காட்போட் ஆகிய உற்பத்திகளை மேற்கொள்வோர், கட்டாயம் கழிவுப் பொருட்களை வெளியகற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதனால் 2005 ஆம் ஆண்டு முதல் மேற்குறித்த உற்பத்திப் பொருட்களின் நிறுவனங்கள், தமது உற்பத்திக் கணக்குகளில் சுற்றுச்சூழல் மாசடைவதற்கான செலவினை தமது உற்பத்தி இலாபநட்டக்கணக்குகளில் வெளிக்காட்டவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் உலகளாவிய ரீதியில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான நல்லதொரு திட்டமென சுற்றுச்சூழலியலாளர்கள் பாராட்டுகின்றனர்.

டென்மார்க்கில் இடம்பெற்ற ஒன்றுகூடலில் ஐரோப்பிய யூனியனின் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் ஒன்றாக இணைந்து ஏகமனதாக இம்முடிவினை எடுத்துள்ளனர்.

# யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள்

தமிழின்பன்

காரைநகர்ப் பகுதியின் கடற்தொழில் நடவடிக்கைகள் குறித்து இன்றைய பகுதியில் பார்க்கலாம்.

போது காரைநகர் பிரதேசமக்கள் தம் இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்நதனர்.



காரைநகரானது- சுழிபுரம் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் அடங்கும். அதே வேளை, ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ளேயே உள்ளடக்கப்படுகின்றது. பூகோள ரீதியில் காரைநகர் ஓர் தீவாகவே விளங்குகின்றது. பொனாலைப் பாலமே காரைநகரை குடா நாட்டுடன் இணைக்கின்றது என்பது நாம் அறிந்த விடயம். கடற்தொழில் நடவ டிக்கைகளின் இறங்குதுறை என்ற அடிப்படையில் 10 இறங்குதுறைகளாக காரைநகரைப் பிரிக்கலாம். அவையாவன-

1. சாம்பலோடை
2. கசூரினா பீச்
3. ஊரி
4. பிட்டி எல்லை
5. பாலாவோடை
6. தோப்புக்காடு
7. வியாவில்
8. வேரப்பிட்டி
9. மருதபுரம்
10. நீலங்காடு

1980 காலப்பகுதியில் வளங்கொழிக்கும் பூமியாக காரைநகர் விளங்கியது. F.G.B. எனப்படும், தும்புக் கண்ணாடியிலான இயந்திர வள்ளங்கள் மூலம் மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பிடிக்கப்படும் பெருமளவு மீன்கள் ஐஸ் இடப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டன. அது மட்டுமல்ல, காரைநகரின் முதற்பகுதில், அதாவது- தோப்புக்காடு என்னும் கிராமத்தின் அயலில் சீநோர் நிறுவனம், தும்புக்கண்ணாடிப் படகு செய்யும் பாரிய தொழிற்சாலை ஒன்றை நிறுவி, குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் தும்புக்கண்ணாடிப் படகுகளைத் தயாரித்து விநியோகம் செய்தது.

இத்தொழிற்சாலை மூலம் பல நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்பைப் பெற்றனர். பின்னர் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளினால் சீநோர் நிறுவனம் முற்றாக சேதமைந்துவிட்டது. அந்நிறுவனத்தின் பலகோடி ரூபாய் சொத்துக்களும் அழிக்கப்பட்டுவிட்டன. இந்நிறுவனத்தின் இழப்பானது, காரைநகர் கடற்தொழிலாளர்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பாகும். 1990 ஆம் ஆண்டில், மீண்டும் தொடங்கிய 2 ஆம் ஈழப்போரின்

## அன்றும்

தற்போதுதான் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். எனினும், சில பகுதிகள் பாதுகாப்பு வலயங்களாக, பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக நீலங்காட்டின் ஒரு பகுதியைக் குறிப்பிடலாம்.

தற்பொழுது காரைநகரில் உள்ள கடற் தொழிலாளர்களின் விபரங்களைப் பார்ப்போம்.இவற்றில் குறிப்பாக தோப்புக்காடு மக்கள் இப்போதுதான் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர். இவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் முயற்சியில், யூ.என்.எச்.சி.ஆர் போன்ற அரசசார்ப்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அது மட்டுமல்ல, யுஎன்.எச்.சி.ஆர் நிறுவனம்- சாம்பலோடை, கசூரினா பீச், ஊரி, வேரப்பிட்டி போன்ற பகுதிகளுக்கு சுழற்சிமுறைக் கடன் திட்டத்தின் கீழ், வலை மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்கி அவர்களின் தொழிலை ஊககிவித்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

காரைநகர் மீனவர்களின் நலன்களைப் பேணுவதற்காக, இப்பரிவில் 10 கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதில், சாம்பலோடை இறங்குதுறையின் அம்பாள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது.

| கிராமம் / இறங்குதுறை | மீனவக் குடும்பங்கள் | கடற்தொழில் செய்வோர் | குடித் தொகை |
|---|---|---|---|
| சாம்பலோடை | 194 | 245 | 873 |
| கசூரினா பீச் | 75 | 148 | 330 |
| ஊரி | 154 | 140 | 520 |
| பிட்டி எல்லை | 90 | 65 | 380 |
| பாலவோடை | 40 | 35 | 140 |
| தோப்புக்காடு | 110 | 50 | 445 |
| வியாவில் | 47 | 35 | 193 |
| வேரம்பிட்டி | 120 | 90 | 521 |
| மருதபுரம் | 100 | 80 | 410 |
| நீலங்காடு | 52 | 41 | 111 |

இதில் 250 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர். இச்சங்கத்தில் கடற்தொழில் வங்கி ஒன்று உருவாக்குவதற்கு, கடற்தொழில் அமைச்சு அனுமதியும் வழங்கியுள்ளது. இதற்காகத் தற்போது வங்கிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பொதுவாக, கார்த்திகை மாதம் தொடக்கம

## இன்றும்

தை மாதம் வரை இப்பிரதேசத்தில் அதிக மீன்பிடிப்பு நடைபெறும். சராசரியாக மாதம் ஒன்றிற்கு 12,000 Kgக்கு மேற்பட்ட மீன்கள் பிடிக்கப்படுகின்றன. பொதுவாக, பாரம்பரிய மீன் பிடிக்கலங்களே இங்கு தொழிலில் ஈடுபடுகின்றன. ஏனெனில், இம்மீனவர்களின் இயந்திரப்படகுகள் அனைத்தும் . போரினால் அழிவடைந்துவிட்டன. தற்போது இங்குள்ள கலங்களின் விபரங்கள்.

F.G.B 17 1/2 கலங்கள் - 10
கட்டுமரங்கள் - 85
வள்ளங்கள் - 15

இக்கடற் பரிசோதகர் பிரிவிற்குள் "மீனவர்கள் ஓய்வூதியத்திட்டம்" நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வகையில் கடற்தொழிலில் ஈடுபட்ட வருக்கான ஓய்வூதியத்திட்டத்தில் காரைநகர்ப் பகுதியில் 140 பேர் இணைந்துள்ளனர்.

இன்று இப்பிரதேச மக்களின் முக்கிய பிரச்சினைகளாக இனங்காணப்பட்டவை வருமாறு-

- ✪ கடற்தொழில் செய்வதற்கு வேண்டிய கடற்தொழில் கலங்கள் பற்றாக்குறை.
- ✪ குடிநீர்த் தட்டுப்பாடு.
- ✪ மீனவக்குடியிருப்புக்கள் பாரிய சேதமடைந்து தற்பொழுது குடியிருக்க முடியாதுள்ளன.
- ✪ நீண்ட காலம் திருத்தப்படாதுள்ள கடற்தொழிலுக்கு வேண்டிய வீதிகள்.

மேற்படி பிரச்சினைகள் ஓரளவுக் கேனும் நிவர்த்தி செய்யப்படும்பட்சத்தில் இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதில் ஐயமில்லை.

எதிர்காலத்தில் நடைமுறைப்ப டுத்தப்படவுள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் இக் கடற்தொழில் பிரதேசம் பாரிய புனர்வாழ்வுப் பணியை வேண்டிநிற்கின்றது.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | சுன்னாகம் | சங்கானை | சாவகச்சேரி | மருதனார்மடம் | ஊர்காவற்றுறை |
|---|---|---|---|---|---|---|---|
| வெங்காயம் | 70/- | 80/- | 60/- | 55/- | 60/- | 60/- | 70/- |
| பச்சை மிளகாய் | 120/- | 130/- | 120/- | 120/- | 100/- | 80/- | 160/- |
| கத்தரிக்காய் | 80/- | 80/- | 60/- | 70/- | 60/- | 50/- | 90/- |
| பாகற்காய் | ✹ | 120/- | 100/- | 100/- | 80/- | ✹ | ✹ |
| வெண்டிக்காய் | 35/- | 40/- | 20/- | 25/- | 30/- | 25/- | 30/- |
| உருளைக்கிழங்கு | 75/- | 70/- | 80/- | 70/- | 70/- | 70/- | 70/- |
| பீற்றூட் | 45/- | 40/- | 40/- | 25/- | 30/- | 25/- | 40/- |
| கரட் | 60/- | 80/- | 60/- | 60/- | 60/- | 40/- | 50/- |
| பயிற்றை | 60/- | 60/- | 50/- | 50/- | 40/- | 50/- | 60/- |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## மீள நினைவூட்டப்பட்ட அரச பயங்கரவாதம்!

வடமராட்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்கள் அமைதி முயற்சிக்கான அச்சுறுத்தல்களாகவும், தடைக்கற்களாகவும் - படையினரின் செயற்பாடுகளும், நிலைப்பாடும் அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட் சியினர் நெடுந்தீவிலிருந்து வெளியேற வேண்டும் என அங்குள்ள மக்களால் நடாத்தப்பட்டுவரும் போராட்டத்துக்கு ஆதரவாக தொடராக யாழ்.குடாநாடெங்கும் நடந்துவரும் மக்கள் போராட்டங்கள் வழியே - நெல்லியடியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை- தாக்குவது என்ற முன்கூட்டிய தீர்மானத்துடன் எதிர் கொண்டமாதிரியே பொலிஸாரின் செயல்கள் அமைந்திருக்கின்றன.

மறியல் போராட்டம் அமைதியாக நடந்து கொணடிருந்தவேளை - எவ்விதமான முகாந்திரமுமற்று, மிலேச்சத்தனமான முறையில் பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

மறியலில் ஈடுபட்ட மக்கள் மீதான தாக்குதல் என ஆரம்பித்து - சம்பவ இடத்திலிருந்து வெளியே நின்றிருந்த பொதுமக்கள், வர்த்தகர்கள் என - எவ்வித கட்டுப்பாடுகளுமற்ற முறையில், அரச பயங்கரவாதத்தை மீள நினைவூட்டுபவர்களாக பொலிஸார் நடந்து கொண்டது, எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

சம்பவ இடத்தில் - வெறி கொண்டவர்கள் போலவே பொலிஸார் நடந்து கொண்டதாக, அந்த இடத்தில் நின்ற ஓய்வுபெற்ற அரச அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். பழிவாங்கும் உணர்வோடு நடந்துகொண்ட அவர்களுடைய வரையறையற்ற தாக்குதலுக்கு சிறுவன் ஒருவனும்கூட தப்பவில்லை என அவர் வேதனையோடு குறிப்பிட்டார்.

இத்தாக்குதலின் போது - அவ்விடத்திற்குச் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர் ஒருவரும் தாக்கப்பட்டிருக்கிறார். தான் பத்திரிகையாளர் எனக் கூறியும், அவர் தாக்கப்பட்டமையானது, பத்திரிகைச் சுதந்திரத்தையும், உரிமையையும் மீறும் அப்பட்டமான அராஜகம் என்பதில் சந்தேகமில்லை.

அமைதி வழியில் சுமுகவாழ்வு நிலைக்கும் என நம்பிக்கையோடு காத்திருக்கும் மக்களுக்கு பொலிசாரின் மனிதாபிமானமற்ற, கொடூரம் நிறைந்த இந்த அணுகுமுறை சமாதானத்தின் மீதான எதிர்பார்ப்பைச் சிதைப்பதாகவே உள்ளது.

நெல்லியடியில் நடந்த சம்பவம் அரச படைகள் இன்னமும் தமது தமிழர் விரோத நிலைப்பாடுகளிலிருந்து மாறவில்லை எனவும், சமாதானத்தைக் காப்பதில் அவர்கள் கவனம் செலுத்துபவர்களாக இல்லை எனவும் மக்களை எண்ண வைத்திருக்கின்றது.

இந்தச் சம்பவம் பற்றியும் இத்தாக்குதல்களின் பின்னணி பற்றியும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்குமாயின், அது மக்களின் சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாகவே இருக்கும்.

நெல்லியடியில் மக்கள் மீது தாக்குதல் நடாத்தியோரை நீதிக்குமுன் நிறுத்தும் முயற்சியில் சம்பந்தப்பட்டோர் இறங்காதிருப்பின்- அது இந்த அராஜகச் செயலை நியாயப்படுத்துவதாகவே இருக்கும்.

எனவே, அரசாங்கம் - இவ்விடயத்தில் உறுதியான உடனடி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். சமாதானத்தைச் சீர்குலைத்து, மக்களிடையே வெறுப்பையும், வேதனையையும் தரும் இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நடக்காதிருப்பதை அரசாங்கம் தனது செயலின் மூலமாக உறுதிப்படுத்த வேண்டும்.

தவறின்-சமாதானத்தையும் அமைதியையும் சிதைக்கும் இத்தகைய மிலேச்சத்தனங்களுக்கு, அரசாங்கம் துணைபோவதாகவே மக்கள் கருத்திற்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

### தமது விடுதலையைக் கோரி

# களுத்துறைத் தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்க திட்டம்!

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்திச் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

களுத்துறைச் சிறைச்சாலையில் தற்போது 70 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தம்மை விடுவிக்கத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்தைக் கோரியே சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி 19 ஆம் திகதி இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்க தமிழ் அரசியல் கைதிகள் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதம் களுத்துறைச் சிறைக்கைதிகள் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, அமைச்சர் மிலிந்த மொறகொட சிறைச்சாலைக்குச் சென்று, கைதிகளில் விடுதலை குறித்து துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனினும், குறிப்பிட்டளவான தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகளே வாபஸ் பெறப்பட்டு, விடுதலை பெற்றுள்ளனர். தொடர்ந்தும், 70 கைதிகள் தடுத்து வைக்கப்படடுள்ள நிலையில், தமது விடுதலையைத் துரிதப்படுத்தக் கோரி இவர்கள் மீண்டும் உண்ணாவிரதப்போராட்டத்தில் இறங்கத் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை, களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த, யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகை ஆகியோர் கைதிகளைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்ததோடு அங்கு விசேட திருப்பலி ஒன்றையும் ஒப்புக்கொடுத்தனர்.

## மீள்குடியமர்வுக்கு ஜேர்மனி நிதியுதவி

வடக்கிலும் கிழக்கிலும் மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக ஜேர்மன் அரசாங்கம் 6 கோடி 15 லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறது.

ஜேர்மனியின் அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த உதவியை கூட்டாக வழங்கியுள்ளன.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் இடம் பெயர்ந்த 2400 குடும்பங்கள் மீளக்குடியமர்வதற்கு இந்தப் பணம் வழங்கப்படும்.

# பிரதி சபாநாயகர் நியமனம் ஆனந்தசங்கரி ஏற்க மறுப்பு!

(நமது நிருபர்)

நாடாளுமன்றத்தில் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கும் பிரதிச் சபாநாயகர் பதவிக்கு, கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியை நியமிக்குமாறு கோரி, அமைச்சர் மகேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

நாடாளுமன்றப் பிரதிசபாநாயகர் பதவிக்குத் தமிழர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்தக் கோரிக்கையை விடுப்பதாக, அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை - இதுபற்றி கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரியிடம், நமது ஈழநாடு தொடர்பு கொண்டபோது, தான் - இப்பதவியை ஏற்கப் போவதில்லை என்றும், தனக்குத் தெரியாமல் இக்கோரிக்கை விடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

## 23 ஆயிரம் சிங்கள மக்கள் மீண்டும் எல்லைப் பகுதிகளில்

(கொழும்பு)

அனுராதபுர- பொலனறுவ மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்த 23 ஆயிரம் சிங்கள மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்விரு மாவட்டங்களிலும் 109 கிராம அலுவலர் பிரிவுகளில் இம் மீள்குடியமர்வு இடம் பெறவுள்ளது. முதற்கட்டமாக கெப்பிற்றிகொலாவ, மதவாச்சி, நொச்சியாகம, மகாவிலாச்சிய, திம்புலாகல, மெதிரிகிரிய, ஹிங்குராங்கொட, லங்காபுர, தமன்கடுவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மீள்குடியமர்வு இடம் பெறவுள்ளது.

22 எல்லைக் கிராமங்களில் 4982 குடும்பங்களைக் குடியமர்த்துவதெனவும், இவர்களுக்கான வசதிகள் உதவிகளை வழங்குவதெனவும், அரசு தீர்மானித்துள்ளது.

வடமத்திய மாகாண அபிவிருத்தி நிதியத்தினுடாக இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத தேக்கு மர ஏற்றுமதி சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிப்பு

(கொழும்பு நிருபர்)

இந்தியாவுக்குத் தேக்கு மரங்களை-சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ய முற்பட்ட சம்பவம் ஒன்று சுங்கத் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 4 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரப்பலகைகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வர்த்தகர் ஒருவர் முனைந்தபோதே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2 கொள்கலன்களில் சுமார் 2 லட்சத்து 60 ஆயிரம் பெறுமதியான தேக்கு மரப்பலகைகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து - வன பரிபாலனத் திணைக்களத்தின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத ஏற்றுமதி குறித்து தெரியவந்தது.

குறிப்பிட்ட வர்த்தகர் சுமார் 4 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரப்பலகைகளை, முன்னாள் அமைச்சரும் தற்போதைய சுற்றுச் சூழல் அமைச்சருமான ரேணுகா ஹேரத் மற்றும் ஏற்றுமதிச் சபையின் அனுமதிக் கடிதங்களுடன் ஏற்றுமதி செய்யத் தயாராக இருந்துள்ளார்.

மரங்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வன பரிபாலனத் திணைக்கள அனுமதி பெறவேண் டும் என்றும், 1961ஆம் ஆண்டு முதல் தேக்கு மர ஏற்றுமதி தடை செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு

# மீட்ட வெடிபொருட்களை அழிப்பதற்கு நடவடிக்கை!

விடுதலைப்புலிகளின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் அகற்றப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களை அழிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முன்னர் இராணுவத்தினர் தங்கியிருந்து - புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து அகற்றப்பட்ட வெடிபொருட்களை அழிக்கவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

மன்னார் பிரதேசத்தில் இருந்து அகற்றப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெடிபொருட்கள் நேற்று நாயாற்று வெளியில் வைத்து அழிக்கப்பட்டன. இன்று வவுனியா வடக்கிலுள்ள கனகராயன் குளம் பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்களும், நாளை பி.ப.1மணியளவில் தாளைடியில் ஒரு தொகுதி வெடிபொருட்களும் அழிக்கப்படவுள்ளன.

அகற்றப்பட்ட வெடிபொருட்களை அழிக்கும் நிகழ்வில் பிரிட்டனின் விசேட கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழு பார்வையிடவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர்களுக்கும், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

பிரதேச ரீதியாக கடந்த மாதத்தில் மீட்டு அழிக்கப்படவுள்ள வெடிபொருட்கள் விபரம்:

**மாசார் - பளை**

கிளைமோர் - 01, 60 மி.மீ மோட்டார் எறிகணை - 28, 81 மி.மீ எறிகணை - 08, ஆர்.பி.ஜி எறிகணை - 10, 120 மி.மீ மோட்டார் எறிகணை - 08, றொக்கட் எறிகணைகள்- 04.

**முகாவில் - பளை**

60 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 60, 81 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 41, ஆர்.பி.ஜி எறிகணைகள்- 11, 40மி.மீ. எறிகணைகள் - 05, கைக்குண்டுகள் - 03.

**பெரியமடு - மன்னார்**

81 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 44, 60 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 33, ஆர்.பி.ஜி எறிகணைகள் -06, 152 மி.மீ ஆட்லறி எறிகணை - 01, வாகன மிதிவெடிகள் - 03.

**கோவில்வயல் - இயக்கச்சி**

ரி 72 மிதிவெடிகள் - 1250,

**பாப்பாமோட்டை - மன்னார்**

81 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 206, 60 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 60, ஆர்.பி.ஜி எறிகணைகள் - 02.

**மடு - மன்னார்**

81 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 60, 60 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 28.

**முள்ளிக்குளம் - மன்னார்**

81 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 130, 60 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 14, 40 மி.மீ எறிகணை - 01.

**புலிமச்சிநாத குளம் - முல்லை**

60 மி.மீ மோட்டார் எறிகணைகள் - 50, மிதிவெடி - 01.

**வவுனியா வடக்கு**

ஆட்லறி எறிகணைகள் - 1548, என்பனவே மனிதநேய கண்ணி வெடிப்பிரிவினால் மீட்கப்பட்டன. (01)

## யாழ்.மாவட்ட அபிவிருத்தி குறித்து ஆராய

# அடுத்த வாரம் விசேட செயலமர்வு ஜேர்மனியும் நேரடியாகப் பங்கேற்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான விசேட செயல்மர்வு ஒன்று அடுத்தவாரம் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

'யாழ்ப்பாணச் செயற்திட்டம்' என்றழைக்கப்படும் பாரிய செயற்திட்டம் குறித்தும், அதனோடு இணைந்த வகையில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும், இவ்விசேட செயலமர்வில் ஆராயப்படவுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இச்செயலமர்வுக்காக அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான விசேட ஆலோசகர் ஒருவர் ஜேர்மனியில் இருந்து வருகைதரவுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து திணைக்களங்களின் தலைவர்களும், அனைத்துப் பிரதேச செயலர்களும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளும், வட - கிழக்கு மாகாண அமைச்சின் உயர் அதிகாரிகளும் இக்கூட்டத்துக்கு சமுகம் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

# குறைந்த வசதிகளுடன் கைதடி வயோதிபர் இல்லம்

(வடமராட்சி கிழக்கு)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளை அடுத்து இயங்கமுடியாமல் இருந்த கைதடி முதியோர் இல்லம், தற்போது 186 முதியோர்களுடன் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இதற்காக யுத்தத்தின்போது சேதமாக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தாங்கி 10 ஆயிரம் கலன் தண்ணீர் கொள்ளக் கூடிய வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருந்த ஊழியர்களின் விடுதிகளும் சேதமடைந்திருப்பதனால், இங்கு பணிபுரிபவர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து கடமைக்கு வருவதில் போக்குவரத்து இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளது. அதேவேளை, இங்கு பாவனைக்காக பயன்படுத்தப்பட்டு வந்த ஓட்டோவும் மிகவும் பழுதடைந்த நிலையில் நாவற்குழிப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இங்கு தொலைபேசி இணைப்போ, மின் இணைப்போ வழங்கப்படாமையால் சிறிய வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது. புதிய அதிக வலுவுள்ள ஜெனரேற்றர் வழங்கும்படி முன்னாள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தும், பலன் ஏதும் கிடைக்கவில்லை என முதியோர் இல்ல வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (17)

# பளைப் பகுதிப் பாடசாலைகளில் மிதி வெடிகள் அகற்றும் பணி

(பளை)

அடுத்த ஆண்டு தொடக்கம் சொந்த இடத்தில் மீள இயங்கவுள்ள பளை மத்திய கல்லூரி, தர்மக்கேணி தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டன.

அத்துடன் தற்பொழுது இவர்கள், பளை வேம்போடுகேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளவிலும் மிதிவெடி மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (115)

## வடமராட்சி கிழக்கில்

# புனரமைப்பு பணிகளில் 'நிக்கொட்' ஈடுபடும்!

(வடமராட்சி கிழக்கு)

'நிக்கொட்' நிறுவனத்தால் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் தொடக்கம் வடமராட்சி கிழக்கில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நான்கு பாடசாலைகளுக்கு கட்டடங்கள் அமைத்தல், மாமுனையிலிருந்து கட்டைக்காடு வரையிலான கடற்கரை வீதியைச் செப்பனிடுதல் ஆகிய பணிகளே நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

# உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வடக்கு - கிழக்குப் பகுதி மக்கள்

## உடன் நடவடிக்கைக்கு மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு நிருபர்)

இலங்கையின் வடக்கு - கிழக்குப்பகுதி மக்களின் அடிப்படை மனித உரிமைகளை நிறைவேற்ற வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அண்மையில் மேற்கொண்ட விஜயத்தை அடுத்தே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கல்வி பெறும் உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பது, ஏனைய வசதிகள் மறுக்கப்பட்டிருப்பது, வீட்டு வசதி வாய்ப்புக்கள் கிடைக்காதிருப்பது என்பன மனித உரிமை ஆணைக்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கல்வியைப் பெற முடியாதநிலை ஏற்பட்டிருக்கின்றது. இதைவிட தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்கும் இப்பகுதி மக்கள் பலத்த நெருக்கடிகளையும், தேவையற்ற காலதாமதங்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

யுத்தத்தினால் சேதமடைந்துள்ள வீடுகளில், கட்டடங்களில் மீளக்குடியேறுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்காமல் இப்பகுதி மக்கள் திண்டாடுகின்றனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் உடனடி-அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள இம்மக்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்ட மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இவ்விசேட அறிக்கை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம வாராந்த சொற்பொழிவு, 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 இற்கு நடைபெறவுள்ளது.

இதில் அறிமுகவுரையை ஆசிரியர் இரா.ஸ்ரீநடராசாவும், பகவத்கீதை எனும் விடயம் தொடர்பான தொடர் சொற்பொழிவை ஆசிரியர் அ.குமாரவேலும் நிகழ்த்தவுள்ளனர். (76)

# சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலாகியுள்ள அழியாக் கழிவுகளான பிளாஸ்ரிக் பாவனை!

இன்று உலகம் பல்வேறு வழிகளில் அளப்பரிய வளர்ச்சி கண்டு நிற்கின்றது. இவ்வளர்ச்சியினால் நன்மைகள் ஏற்பட்டு இருப்பினும், தீமைகளும் ஏற்படவே செய்துள்ளன. இந்த வகையில் உலகினை அச்சுறுத்தும் பிரச்சினைகளுள் சூழல் மாசடைதல் ஒரு குறிப்பிட்டுக் கூறக்கூடிய பெரும் பிரச்சினையாக எழுந்து நிற்கின்றது. சூழல் மாசடைதல் என்பது நிலம், நீர், வளி என்பன தூய்மைக்கேட்டிற்கு உட்படுதல் எனக்கூறிக்கொள்ளலாம். இவற்றின் தூய்மைக்கேட்டினால் இன்று மனிதவாழ்வு பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி நிற்கின்றது. இந்நிலையில் சூழலியலாளர்கள், இயற்கை ஆர்வலர்கள் போன்றோரால் இத்தகைய பிரச்சினைகளுக்கு எதிராகப் பிரசாரம் மேற்கொள்ளப்படாமலும் இல்லை. ஆயினும் இந்தப் பிரச்சினை மூன்றாம் மண்டல நாடுகளிலேயே நன்கு புரையோடிய புற்றுநோயாக மாறிக்கொண்டிருக்கின்றது. இந்தவகையில் யாழ்ப்பாணக் குடாநாடும் இந்தப் புற்றுநோய்க்கு இன்று உட்பட்டு நிற்கின்றது.

தற்பொழுது யாழ். குடாநாட்டில் சூழல் மாசடைதல் பிரச்சினையில் முக்கிய பிரச்சினையாக உருப்பெற்று வருவது பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களின் அதிகரித்த பாவனையாகும். இவை சுற்றோட்டத்துக்கு உட்படுவதில்லை (அழிவடைவதில்லை). இவற்றினைப் பயன்படுத்தி, பின் கைவிடும்பொழுது இவை அழிவடையாது இயற்கையில் நிரந்தரமாகவே தங்கிவிடுகின்றன. அதாவது இவை சேதன மாற்றத்துக்கு உட்பட்டு 100% சுற்றோட்டத்துக்குள்ளாவதில்லை. இதனாலேயே இந்த பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள், சூழலில் பல பிரச்சினைகளை உருவாக்குகின்றன.

குடாநாட்டில் தற்பொழுது இந்தப் பிரச்சினை மேலெழுந்து நிற்பதற்கான காரணங்களை விலாவாரியாக ஆராய்தல் மிகப் பொருத்தமுடையதாக அமையும். அந்தவகையில் இதற்கான காரணங்களாக -

★ தற்பொழுது ஏற்பட்ட சாதகமான சூழலைத் தொடர்ந்து பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்கள் யாழ். குடாநாட்டு சந்தைக்கு அதிகளவில் வரத் தொடங்கியுள்ளன. இவ்வாறு அதிகளவு பொருட்கள் சந்தைக்கு வந்ததால், இப்பொருட்களின் விலைகள் கடந்தகாலங்களை விட பெருமளவு சரியத் தொடங்க, மக்கள் இவற்றைக் கொள்வனவு செய்ய அதிக நாட்டம் காட்டி வருகின்றனர்.

★ கடந்த போர்க்காலங்களில்

## செய்திக் கட்டுரை



இத்தகைய பொருட்கள் எமது பகுதிகளுக்கு எடுத்து வரப்படுவதற்கு அரசினாலேயே தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தடைகள் சூழல் பாதுகாப்பு தொடர்பில் எமக்கு பெரிய அளவில் நன்மை அளித்தன என்றும் சொல்ல வேண்டும். ஆயினும், தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைத் தொடர்ந்து தடைகள் நீக்கப்பட, இத்தகைய பொருட்கள் மக்களை பாரியளவில் ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டன.

★ ஷொப்பிங் பைகள் (Shopping bags), லஞ் சீற் (Lunch Sheet) என்பவை எடுத்துச்செல்ல இலகுவாக இருப்பதாலும், செலவு குறைந்ததாக இருப்பதாலும், கடதாசிப் பைகளை விட இவற்றினை எடுத்துச்செல்வது தற்காலத்தில் நாகரிகமாகக் காணப்படுவதாலும், புடவைக்கடைகள், பாதணிக்கடைகள் தங்கள் விற்பனைப் பொருட்களைப் பொதியிடவும், விளம்பரப்படுத்தவும் இத்தகைய பைகளைப் பயன்படுத்துவதாலும் - தற்பொழுது இவற்றின் பாவனை அதிகரித்துள்ளதுடன், இவை மீளவும் பாவனைக்கு உட்படாத பொழுது, அழிவடையாக் கழிவுகளாக சூழலில் அதிகரிக்கக் தொடங்குகின்றன.



★ தற்பொழுது தென்பகுதியில் இருந்து இங்கு எடுத்துவரப்படும் குளிர்பானங்கள் பலவும் பிளாஸ்ரிக் போத்தல்களிலேயே அடைக்கப்பட்டு எடுத்துவரப்படுகின்றன. இவை மீளவும் குளிர்பானங்கள் அடைக்கப் பயன்படுத்தப்படுவதில்லை. அத்துடன் இவை மக்களாலும் மீள்பாவனைக்கு உட்படுத்தப்படுவது மிகமிகக் குறைவு. இந்நிலையில் சூழலுக்குக் கழிவுகளாக விடப்படும் இவை, அழிவடையாது சூழலில் காணப்படுகின்றன. தற பொழுது, யாழ். குடாநாட்டு சந்தைகளுக்கு வந்துள்ள சுத்திகரிக்கப்பட்ட நீரும் இவ்வாறு பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்டு வருவதால் அதன் நிலையும் இவ்வாறானதே ஆகும்.

★ தற்பொழுது சந்தைக்கு வரும் அதிகளவு நுகர்வுப்பொருட்கள் பொலித்தீன்கள் மூலமே பொதியிடப்பட்டு வருகின்றன. (உதாரணமாக-பால்மா வகைகள், உப்பு, சீனி, பிஸ்கட் வகைகள், இனிப்பு வகைகள், ஐஸ்கிறீம்) ஏனெனில், இவற்றினை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பல்தேசியக் கம்பனிகள் தம் பொதியிடல் செலவை இழிவுபடுத்த பொலித்தீனை அதிகளவு நாடுகின்றன. எனவே இந்த நுகர்வுப்பொருட்களைப் பயன்படுத்திய பின் கைவிடப்படும் வெற்றுப் பொதிகள் அழிவடையாது தற்பொழுது எமது சூழலை அதிகளவில் மாசுபடுத்தி வருகின்றன.

★ தற்பொழுது குடாநாட்டு சந்தைகளுக்கு அதிகளவில் மலிவு விற்பனையில் வந்துள்ளன இறப்பர் பாதணிகள். இவற்றைப் பயன்படுத்தி விட்டு அணிய முடியாது பழுதடையும் பொழுது கழிவுகளாக சூழலுக்கு விடப்படுகின்றன. இவ்வாறு சூழலுக்கு விடப்படும் பழுதடைந்த பாதணிகள் அழியாக்கழிவுகளாக சூழல் மாசடைதலை அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

★ யாழ்.குடாநாட்டு மக்களை இப்பொழுது ஆட்டிப்படைப்பது பிளாஸ்ரிக் தளபாடங்கள் ஆகும். முன்னைய காலங்களைவிட மலிவு விலையில், பல்வேறு வர்ணங்களில், பல்வேறு வடிவங்களில், பல்வேறு தரங்களில் இவை யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் வந்து குவியத் தொடங்கியுள்ளன. பல்வேறு நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு இத்தகைய பொருட்களை குடாநாட்டில் சந்தைப்படுத்த முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றன. மக்களும் பல காலங்களுக்குப் பிறகு இத்தகைய பொருட்களைக் கண்ணுற்றதால் தாராளமாகவே வாங்கிக் குவிக்கின்றார்கள். மேலும், மரப் பலகைகளுக்கு இங்குள்ள தட்டுப்பாடுகள் காரணமாக மரத்தளபாடங்கள் விலை உயர்வாகக் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் மரத்தள பாடங்களைவிட இவை விலை குறைவாக இருப்பதால் மக்கள் இத்தகைய பிளாஸ்ரிக் தளபாடங்களை விரும்புகிறார்கள்.

**இயேசுநாயகம் ஜெயசுதன். B.Com.**

(மிகுதி நாளை தொடரும்)

# ஆயுத ஆவணக் கையாளல்; அமெரிக்க நடவடிக்கை தவறு!

## ஐ.நா. பொதுச்செயலர் குற்றச்சாட்டு



கைத்தறி ஆலையிலும் ஆயுதப் பரிசோதனை

ஈராக் ஆயுத விபரங்கள் அடங்கிய ஆவணத்தினை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை கையாண்ட விதம் துரதிர்ஷ்டமானது என ஐ.நா. செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக் சமர்ப்பித்த ஆயுத விபரங்களின் முழுமையான செப்பனிட்ட அறிக்கை வெளியிடப்பட முன்னர், அமெரிக்கா தனக்குரிய பிரதியை எடுத்துள்ளது. இவ்வாறான அமெரிக்காவின் நடவடிக்கை பிழையான வழி முறையிலானது என கோபி அனான் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் இச்செயற்பாடானது, ஏனைய நிரந்தர அங்கத்துவ நாடுகள் மத்தியில் பெருங் குழப்பம் ஏற்படுத்தியுள்ளதுடன், ஐ.நாவில் மிகப் பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாக இது உருவாகலாம் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை,

ஈராக் - அழிவு தரும் ஆயுதங்கள எவையும் அமெரிக்கா கூறுவதனைப் போல் தன்னிடம் இல்லை என்பது தற்பொ ழுது உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

# இராணுவ மையங்களைச் சோதிக்க எரித்திரியா அமெரிக்காவுக்கு அனுமதி



ஜிபூட்டிக் கடற்கரையில் அமெரிக்கப் படையினர்

அமெரிக்கா தனது பயங்கரவாதத்திற்கெதிரான போரின் ஒரு பகுதியாக, எரித்திரியாவின் இராணுவ மையங்களைச் சோதனையிடலாம் என, எரித்திரிய ஜனாதிபதி அனுமதியளித்துள்ளார்.

நான்கு நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டு தற்பொழுது ஆபிரிக்காவில் தங்கியிருக்கும் அமெரிக்க பாதுகாப்புச்செயலர் ரம்ஸ் பீல்டிடமே, எரித்தீரிய ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளா

எரித்திரியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளில் முன்னைய காலங்களில் இருந்த முறுகல் நிலையினைத் தளர்த்தவே எரித்திரிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அமெரிக்கா, கடந்த ஒக்டோபர் மாதம் எரித்திரியாவை மனித உரிமைகள் பேணுவதில்லை எனக் குற்றஞ்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.


உலகவலம்

## செங்கம்பாடிக் காட்டினுள் மேலும் 2 சடலங்கள் மீட்பு

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவின் சடலம் மீட்கப்பட்ட செங்கம்பாடிக் காட்டுப்பகுதிக்கு அண்மையில் மேலும் இரு சடலங்கள் கர்நாடகப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வீரப்பனுடன் நடந்த மோதலில் கொல்லப்பட்ட தமிழக அதிரடிப்படையினரது சடலங்களாக இவை இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. தமிழக அதிரடிப் படையினருடன் நடந்த மோதலின் போதே நாகப்பா இறந்ததாக வீரப்பன் முன்னதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், மோதல் எதுவும் நடக்கவில்லை, வீரப்பனே நாகப்பாவைக் கொன்றதாக தமிழக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, கர்நாடகாவில் நாகப்பா ஆதரவாளர்கள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருதுடன் வாகனங்களுக்கும் தீ வைத்து, தமிழர்களைத் தாக்கியும் வருகின்றனர்.



## சவப்பெட்டிகளுடன் அமெரிக்காவில் கண்டனப் பேரணி

நேற்று முன்தினம் கலிபோர்னியா சமஷ்டிக் கட்டிடத்துக்கு முன்பாக ஈராக்கிற்கு எதிரான அமெரிக்க நடவடிக்கைகளைக் கண்டித்து சுமார் 300 பொது மக்கள் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர். போர் ஏற்பட்டால் ஈராக்கில் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை எடுத்துக்காட்டும் முகமாக குழந்தைகளின் படங்கள் பொறிக்கப்பட்டு அட்டைப்பெட்டிகளால் செய்யப்பட்ட பிரேதப் பெட்டிகளை தமது பேரணியில் எடுத்துச் சென்றனர். அத்தகைய சில பிரேதப் பெட்டிகளையே படத்தில் காண்கிறீர்கள்.


## கண்காணிப்பாளர்கள் இந்தோனேஷியா வருகை

இந்தோனேஷிய Aceh மாநிலத்தில் தனிநாடு கோரிப் போராடிய போராளிகளுக்கும் இந்தோனேஷிய அரசுக்கும் இடையிலான 26 வருடகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு செய்து கொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கையை அடுத்து சர்வதேச கண்காணிப்பாளர்கள் அப்பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.



Aceh போராளிகள்

## பாபாவின் அருள்வாக்கு



உங்களிடம் சுய நம்பிக்கை (Self-Confidence) இருந்தால் பிறர் கூறுவதால் நீங்கள் பாதிக்கப்பட மாட்டீர்கள். சுய நம்பிக்கை இல்லாதவன் தன்னைச் சுற்றி என்ன நடந்தாலும், அதனால் பாதிக்கப்படுவான். இது பெரும் தவறு. நீ ஒரு மனிதன். உனக்கென்று ஒரு மனம் உண்டு. உனக்கென்று ஒரு விருப்பம் உண்டு. உனக்கென்று ஒரு ஆனந்தம் உண்டு. உனது உண்மையியல்பை நீயே உணர்ந்து அனுபவி. நீ தெய்வத்தின் ஆணையைப் பின்பற்ற வேண்டுமே தவிர, சக மனிதனின் ஆணையைப் பின்பற்றலாகாது. உன்னை முதலில் அறிந்து கொள்.

# குஜராத் மாநிலத்தில் இன்று பொதுத்தேர்தல்

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தில் சட்ட சபைத் தேர்தலுக்கான இறுதிப் பிரசாரம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளது. இன்று தேர்தல்கள் நடைபெறும்.

இரண்டு பிரதான கட்சிகளான பாரதீய ஜனதாக் கட்சி, காங்கிரஸ் ஆகியன பலத்த போட்டியை எதிர் கொள்கின்றன.

வாக்களிக்கும் திகதியான இன்று பலத்த பாதுகாப்பு எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இம்மாநிலத்தில் மதக்கலவரம் இடம்பெற்றதனால், ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் முஸ்லிம் மக்களே அதிகமானவர்கள்.



இவ்வாண்டுக்கான 'மிஸ் யூனிவேர்ஸ்' பட்டம் பெற்ற பனாமா நாட்டு அழகி பாங்கொக்கில் ஓர் அநாதைக் குழந்தையுடன்.

## இன்றைய நாள் இனிய நாள்

**12-12-2002 - வியாழக்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 26ம் திகதி**

**திதி** :- பூர்வபட்ச அட்டமி பகல் - 1.55வரை அதன் மேல் நவமி.

**நட்சத்திரம** :- பூரட்டாதி - பி.ப - 3.48 வரை, அதன் மேல் உத்தரட்டாதி

இன்று உதயத்தின் முன் திருவெம்பாவை

**ராகுகாலம்** :- 1.50 - 3.20

**சுபநேரம** :- 7.50 - 9.20

**மேடம்** :- தேகசுகக்குறைவு, அயலவர்களுடன் மௌனம் சாதிப்பது நன்று, வீண்செலவு, மனச்சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- தேகசுகம் நன்று, தெய்வவழிபாடு, பெண் உளப்பூரிப்பு, சமய அறிஞர் தரிசனம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- தொழிற் சிறப்பு, புதிய முயற்சி வெற்றி, மனமகிழ்ச்சி, தெய்வவழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கர்க்கடகம்** :- பிதா மனநிறைவு, தெய்வவழிபாடு, எதிரி மௌனம், பணவரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- தூரப்பயணம் தவிர்க்கவும், புதிய காரியங்கள் தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை

**கன்னி** :- மன்மகிழ்ச்சி, கௌரவம், இறைபிரார்த்தனை, ஆடை அலங்கார மகிழ்வு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- பணவரவு, கடன் திட்டம், காரியசித்தி, நோய் நீக்கம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- புத்திரர் மனநிறைவு, தெய்வ வழிபாடு, புகழ், மக்களால் மதிக்கப்படுதல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- மாதா கவலை, பெண் சுகக்குறைவு, வரவு தாமதம், வைத்தியச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- மனத்தில் தெம்பு, எடுத்த காரியம் வெற்றி, தெய்வ வழிபாடு, ஆடையலங்கார மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- செலவு தேடிவருதல், மந்தரையைப் போன்ற பெண்களால் குடும்பப் பிரச்சினை, மனச்சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மீனம்** :- தேகசுகம் நன்று, இறை பிரார்த்தனை, நண்பர்கள், உறவனர் சங்கமம், மனமகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்களின் சாத்வீக எதிர்ப்பை படையினரை ஏவி நசுக்குவதா?

## விடுதலைப்புலிகளின் அரசியற்துறை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் ஈ.பி.டி.பியினரின் அராஜகங்களையும் அடாவடித்தனங்களையும் அனுபவித்து வந்த மக்கள் சாத்வீக வழியில் காட்டிய எதிர்ப்பை ஈ.பி.டி.பியினர் பொலிசாரையும்,இராணுவத்தையும் ஏவிவிட்டு மக்களைச் சுட்டும் காயப்படுத்தியதோடு, அங்குவந்த பொலிசாரும் திட்டமிட்டு மக்களைத் தாக்கினர் என - விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

நெடுந்தீவு மக்கள் எவ்வாறு ஈ.பி.டி.பியினரின் அடாவடித்தனங்களாலும் அராஜகங்களாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டு வந்தார்களோ அதேபோல், நீண்ட நெடுங்காலமாகவே நெல்லியடிப் பொதுமக்களும் ஈ.பி.டி.பியினரின் அடாவடித்தனங்களாலும் அராஜகங்களாலும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டே வந்துள்ளார்கள். அமைதியையும் சமாதானத்தையும் இயல்பு வாழ்க்கையையும் வேண்டி நிற்கும் தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப்பசியோடு ஆயுதமும் காட்டி அப்பாவி மக்களை சுட்டும் கைது செய்தும், கடத்தியும் அவர்களது உரிமைகளைக் கொள்ளை அடித்தும் இது போன்ற பல கொடுமைகளை புரிந்து வந்த ஈ.பி.டி.பியினரின் அச்சுறுத்தல்கள்- தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையைத் திட்டமிட்டே குழப்பி வந்தது.

காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் மக்கள் மத்தியில் சுயமரியாதை உணர்வுகள் மேலெழுந்து வருவதை யாரும் மறைக்க முடியாது. இதனால் தம்மை ஆயுத முனையில் அச்சுறுத்தும் ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவினரை மக்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறும்படி கேட்பதற்கு, அவர்களுக்கு சட்ட ரீதியான உரிமை இருப்பது மட்டுமல்ல, அது தார்மீக ரீதியான கடமையுமாகும். இது ஐ.நா. சாசனத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையே, மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடியில் ஒன்றுகூடி ஈ.பி.டி.பியினரிடம் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், ஈ.பி.டி.பியினர் பொலிசாரையும் இராணுவத்தினரையும் ஏவிவிட்டு இராணுவ மொழியில் மக்களைச் சுட்டும் அடித்துத்துன்புறுத்தியும் கைது செய்தும் வந்துள்ள்னர். ஈ.பி.டி.பி அமைப்பைச்சேர்ந்த கண்ணன் என்பவரே கைக்குண்டை வீசி மக்களைக் காயப்படுத்தியதுடன், நெல்லியடிக்கு விரைந்து வந்த ஏ.எஸ்.பி ஜானக குணதிலக தலைமையிலான அரச படையினர், மக்களை தேடித்தேடி அவர்களது கடைகளில் இருந்தவர்களையும் உரிமையாளர்களையும் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

சட்டத்தையும்,ஒழுங்கையும் அமைதியையும், பேணிப் பாதுகாக்க வேண்டிய பொலிசாரே சட்டத்தைத் தமது கையில் எடுத்து ஒழுங்குகளைச் சீர்குலைத்து சட்டத்தை தமது காலில் போட்டு மிதித்துள்ளார்கள்.

நெல்லியடியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஐ.பி.சி. செய்தியாளர் தவச்செல்வன் மீதும் ஏனைய செய்தியாளர்கள் மீதும் திட்டமிட்ட கொலை முயற்சியினை ஈ.பி.டி.பியினர் மேற்கொண்டுள்ளனர்.

அரசியல் பணிகளை மேற்கொள்ளும் எந்த அமைப்புக்களும் ஆயுதங்களுடன் மக்கள் மத்தியில் நடமாடக் கூடாது என்பதை புரிந்துணர்வு உடன்படிக்கை உணர்த்துகின்றபோதும் இதனை உணர்ந்து கொள்ளாது, ஈ.பி.டி.பியினர் அரச படையினருடன் சேர்ந்து மக்களைக் கொல்ல முனைவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. இதன் காரணமாக, வடமராட்சியில் இடம்பெற்ற சம்பவத்தினை மன்னிக்க முடியாத குற்றமாகவே நாம் கருதுகின்றோம். ஜனநாயக ரீதியாகப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட அனைத்துத் தரப்பினரும் தண்டிக்கப்படுவதுடன், மக்களின் உண்மையான விருப்பிற்கு யாரும் தடையாக இருக்கக் கூடாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நெல்லியடி.......

விசாரணைக்குக் குழு ஒன்றை அமைக்குமாறும் பிரதமரை கேட்டுக் கொண்டனர். இதற்கு உடனடியாகவே பிரதமர் ரணில் சம்மதம் தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவிலிருந்து தமது உறுப்பினர்களின் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதாகவும், ஆனால - தாம் யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளைத் தொடரப் பாதுகாப்புத்தர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இவ்வேளை- மறியல் செய்த மக்கள் மீது பொலிஸார் அடாவடித்தனமாக நடந்தது எந்த வகையிலும் நியாயப்படுத்தக்கூடியது அல்ல. இது குறித்து விசாரணைதான் எமக்கு முக்கியம் எனத் தமிழ்க் கூட்டமைப்பினர் எடுத்துக்கூறினர்.

இச்சந்திப்பை தொடர்ந்து நெல்லியடிச்சம்பவத்தை விசாரிக்க நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் உறுதியளித்தார்.

(க)

## ஆயர் இல்லச் சந்திப்பிலிருந்து...







## ஞானம்ஸ் ஹோட்டல்...

எல்லாவகையிலும் சிறந்தது எனினும், சுபாஸ் விடுதியிலுள்ள படை நிலைகளை அகற்றினால் குறைந்த எண்ணிக்கையான குடும்பங்களே இப் பகுதியில் குடியமர முடியும் எனவும், ஞானம்ஸ் விடுதியை அகற்றினால் சுமார் 60 குடும்பங்கள் குடியமரலாம் என்பதாலேதான் சுபாஸ் விடுதியிலுள்ள படை நிலைகளை அகற்றாமல் ஞானம்ஸ் விடுதியிலுள்ள படை நிலைகளை அகற்றுவதாகவும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்ததுடன், இதன்மூலம் மணிக்கூட்டு நிலைய வீதி, மின்சார நிலைய வீதி என்பன மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லி)

## குடாநாடு முழுவதும்...

இன்றையதினம் -குடாநாட்டிலுள்ள அனைத்து தொழில் ஸ்தாபனங்களும் அரச மற்றும் அரச சார்பற்ற தொழில் நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கும். போக்குவரத்துக்கள் அனைத்தும் நிறுத்தப் படவுள்ளதாயினும், தற்போது நடைபெற்று வரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை வழமைபோல் நடைபெறும் - இதனை முன்னிட்டு பாடசாலை போக்குவரத்துச் சேவைகள் மட்டும் நடைபெறும். மருத்துவ நிலையங்களும் மருந்து விற்பனை நிலையங்களும் வழமை போல் திறக்கப்பட்டிருக்கும். உணவகங்கள் உட்பட அனைத்து வர்த் தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும்.

இன்றைய பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவாக, குடாநாட்டிலுள்ள பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் அழைப்பு விடுத்தும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர், யாழ்ப்பாண வணிகர் கழகம், யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம், முகாமைத்துவ கற்கைகள்- வணிக பீட மாணவர் ஒன்றியம், குருநகர் வர்த்தகர் சங்கம், சுன்னாகம் வர்த்தகர் சங்கம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வலிகாமக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் ஆகியவையே மேற்படி அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. (க,லி)

# ஜனாதிபதி குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கத் தேவையில்லை

## பிரதமர் ரணில் விசனம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னைத் துப்பாக்கியுடன் வந்து கொலை செய்ய முயன்றதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதன் மூலம் தான் தரத்தில் கீழிறங்கிப் போக விரும்பவில்லை எனப் பிரதமர் ரணில் கருதுவதாக பிரதமரது அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபோன்ற விடயங்களுக்குப் பதிலளிப்பதன் மூலம் தனது நேரத்தை வீணாக்க அவர் விரும்பவில்லையென்றும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# நாரந்தனை தாக்குதல் வழக்கு இன்று நீதிமன்றத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் கூட்டமைப்பினர் நாரந்தனைப் பகுதியில் கடந்த வருடம் தேர்தல் பிரசாரத்திற்கு சென்ற வேளை, ஈ.பி.டி.பி யினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த வழக்கு, இன்று யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இன்று யாழ். நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படும் வழக்கில் யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசாவும், சிவாஜிலிங்கமும் தமது சாட்சியங்களை நீதிமன்றில் தெரிவிக்கவுள்ளனர்.

நாரந்தனையில் நடந்த சம்பவத்தில் இருவர் பலியானதுடன் பலர் படுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

(க,லி)

# காயமடைந்தவரில் மேலும் இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதி

(வடமராட்சி)

நெல்லியடிச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் நேற்று மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அல்லாரையைச் சேர்ந்த த.நிரஞ்சன் (வயது-20), செ.சிவரஞ்சன் (வயது-30), ஆகியோரே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ச)

# சமஷ்டி யோசனைக்கு எதிராக நாடளாவிய எதிர்ப்பு இயக்கம்

## சிஹல உறுமய ஆரம்பிக்கிறது

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணக்கம் தெரிவித்த சமஷ்டி முறையிலான தீர்வு யோசனைக்கு எதிராக நாடளாவிய எதிர்ப்பு இயக்கத்தை வரும் திங்கள் முதல் ஆரம்பிக்கப் போவதாக சிஹல உறுமய அறிவித்துள்ளது.

கொழும்பு பொதுசன நூல் நிலையக் கருத்தரங்கு மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ள இந்த இந்த எதிர்ப்பியக்கம் - சமஷ்டி முறை இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் என்று- சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.40 | 96.85 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.98 | 152.31 |
| 1 யூரோ | 96.75 | 97.78 |
| 1 சுவிஸ் பிராங் | 65.55 | 66.56 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.65 | 54.61 |
| 1 ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1 சவூதி றியால் | 25.78 | 25.78 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.